Registered as a news paper.

பக்கங்கள்: எட்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 சித்திரை 24 ஹிஜ்ரி 1427 ற.ஆகிர் 08 (07.05.2006) ஞாயிற்றுக்கிழமை இதழ் 219

# பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்வரை

# பணிப் புறக்கணிப்பு தொடரும்

## பொது அமைப்புக்களின் ஒன்றியம்

யாழ்ப்பாணம் —

படுகொலைகளை நிறுத்தி, எமக்கான பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தும் வரை பணிப்புறக்கணிப்புத் தொடருமென யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

நேற்றுத் தொடக்கம் குடாநாட்டில் தொடர் பணிப்புறக்கணிப்பை மேற் கொள்வது என யாழ்.மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஒருமன தாக முடிவெடுத்துள்ளன. இதற்கமைய மிக அத்தியாவசிய தேவைகளான வைத்தியசாலைகள், நோயாளிகளின் வாகனசேவை, மின், நீர் விநியோகம் மற்றும் அத்தியாவசிய நுண்பொருட்களின் விற்பனை நடவடிக்கைகள் தவிர்ந்த ஏனைய எல்லாப் பணிகளும் புறக்கணிக்கப்படும்.

குறிப்பாக அரச நிர்வாகம், கல்வி நிலையங்கள், வங்கி உட்பட நிதி நிறுவனங் கள், பயணிகள் போக்குவரத்து போன்ற சகல பணிகளையும் புறக்கணிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழர் தாயகமெங்கும் இன்று திட்டமிடப்பட்ட இனப்படுகொலைகள் கட்ட விழ்த்துவிடப்பட்டுள்ளன. மட்டக்களப்பில் தொடங்கி - அம்பாறை, திருகோண மலை, வவுனியா, கொழும்பு என விரிவடைந்து இன்று குடாநாடு எங்கும் சுடு காடாக்கப்படுகிறது.

குடாநாட்டின் வீதிகள் எங்கும் குருதிக் கறைகள், வீடுகள் எங்கும் மரண ஓலம், ஒட்டுப்படைகள் மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவுகள் மூலம் தமிழ் உணர்வாளர்களை இரகசிய படுகொலைகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டு இயல்புநிலை முற்றாகச் செயலிழப்பு!

யாழ்ப்பாணம் —

அப்பாவி மக்கள் இராணுவத்தினரால் படு கொலை செய்யப்பட்டு வருவதைக் கண்டித்தும், படுகொலைகளை நிறுத்துமாறு வலியுறுத்தியும் யாழ். குடாநாட்டில் அரச மற்றும் தனியார் நிறு வனங்களின் ஊழியர்கள் பணிப் புறக்கணிப் பில் ஈடுபட்டனர்.

இதனால் யாழ். குடாநாட்டின் இயல்புநிலை முற்றாகப் பாதிக்கப்பட்டதுடன் வீதிகள் வெறிச் சோடிக் காணப்பட்டன.

யாழ். குடாநாட்டில் அப்பாவிப் பொதுமக்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டு வருவதைக் கண்டித்தும், இனப் படுகொலைகள் குறித்து அரசு பாராமுகமாக இருப்பதை சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்தும் நோக்குடன் அரச நிர்வாகங்கள், கல்வி மற்றும் நீதி நிர்வாகங்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுமாறு யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அழைப்பு விடுத்திருந்தது.

இதனால் நேற்று இலங்கை போக்குவரத் துச் சபை பஸ்கள், தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடவில்லை. பிரதான நகர்களில் வர்த்தக மையங்கள் சில திறக்கப்பட்டிருந்த போதிலும், மக்கள் நடமாட்டம் குறைந்திருந்தமையால் நண்பகலுக்கு முன்னரே மூடப்பட்டு வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

அஞ்சல் அலுவலகங்கள் திறக்கப்பட்டு அஞ் சல் சேவைகள் வழமைபோன்று நடைபெற்றது.

இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் அப்பாவிப் பொதுமக்களின் படுகொலைகள் நிறுத் தப்பட்டு, இயல்பு நிலை ஏற்படுத்தப்படும்வரை தொடர்ந்து நடைபெறும்மென யாழ். மாவட்ட பொது அமைப்புக்கள் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜப்பானிய விசேட தூதுவர் நேற்றிரவு கொழும்பு வந்தார்

கொழும்பு —

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கான ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூஷி அகாசி நேற் றிரவு 7 மணியளவில் கொழும்பை வந்தடைந்தார்.



## படுகொலைகள் தொடரும்போது பேச்சுக்கள் சாத்தியமில்லை!

கொழும்பு —

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கான ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூஷி அகாசி நேற்றிரவு 7 மணியளவில் கொழும்பை வந்தடைந்தார்.

நான்கு நாட்கள் இலங்கையில் தங்கியிருக்கும் இவர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அரசியல் பிரமுகர்களை சந்தித்து சமாதான முயற்சிகள் குறித்து பேச்சுக்களை நடத்துவார்

பின்னர் நாளைமறுதினம் கிளிநொச்சி சென்று விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேசுவார் என இலங்கைக்கான ஜப்பானியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

சமாதான முயற்சியில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ள நிலையில் யசூசி அகாஷியின் விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.



## விடுதலைப் புலிகள் தெரிவிப்பு

கொழும்பு —

தமிழர் தாயகத்தில் அரச படையினர் மற்றும் துணை ஆயுதக் குழுவினரின் படுகொலைகள் தொடர்ந்து நிகழ்த்தப்படும்போது - பேச்சுக்களுக்குச் செல்வது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

ஹிந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகைக்கு தொலைபேசிமூலம் வழங்கிய பேட்டியில் விடுதலைப் புலிகளின் ஊடக ஒருங்கிணைப்பாளர் தயா மாஸ்டர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

வடக்கு - கிழக்கில் தமிழ்மக்கள் மீதான படுகொலைகள் நிறுத்தப்படும் வரை அரசாங்கத்துடனான பேச்சுக்கள் நடைபெறாது. படுகொலைகள் தொடரும் நிலையில் பேச்சுக்களுக்குச் செல்வது என்ற பேச்சுக்கே இடமில்லை.

அரசாங்கம் கடல் விமானம் அளிப்பதாக முன்வைத்த யோசனையை தமிழீழ விடுதலைப் புலிகள் மறுத்துவிட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதுவிடயத்தில் நாம் எதுவித முடிவும் இதுவரை எடுக்கவில்லை.

அப்படி ஏதேனும் முடிவெடுக்கப்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ வைத்தியசாலையில் சரத்பொன்சேகா!

கொழும்பு —

இராணுவத் தலைமையகத்துக்குள் நடத்தப்பட்ட தற்கொலைக்குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவசரசிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று கொழும்பு இராணுவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இது தொடர்பாக இராணுவத் தலைமையகத்தால் நேற்று விசேட அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

11 நாட்களுக்கு முன்னர் தற்கொ

(08 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டால் பத்துப் படையினரின் தலை உருளும்!

## பொங்கி எழும் மக்கள் படை எச்சரிக்கை

யாழ்ப்பாணம் —

அப்பாவி பொதுமகன் ஒருவர் படுகொலை செய்யப்பட்டால் சிங்கள இன வெறியர்கள் பத்துப் பேரின் தலை உருளும் என யாழ்.மாவட்ட பொங்கியெழும் மக்கள் படை அறிவித்துள்ளது.

இதுகுறித்து யாழ்.மாவட்ட பொங்கியெழும் மக்கள் படை நேற்று மாலை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

அன்பான மக்களே!

உங்கள் ஒவ்வொருவரின் உயிரிலும் பரிபூரண அக்கறை கொண்டவர்கள் நாங்கள். அதனால் ஒரு தமிழனின் தலைக்கு 10 சிங்கள இன வெறியர்களின் தலைகளை எமது தாயக மண்ணில் சாய்ப்பதென முடிவெடுத்துள்ளோம்.

இது குறித்து பல தடவைகள் எமது ஊடக அறிக்கை மூலம் தங்களுக்கு தெரியப்படுத்தினோம் உங்களின் நகர்வுகள் தாமதிப்பதால் நாம் பாரிய திட்டங்களை தவறவிட்டு வருகின்றோம்.

எனவே நீங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு சென்றால் எமது தாக்குதல்கள் விரைவுபடுத்தப்படும்.

எனவே, காலம் தாழ்த்தாது விரைவாக நகர்ந்து படுகொலைகளில் இருந்து உங்கள் உயிர்களையும் பாதுகாத்து ஆக்கிரமிப்பாளர்களை விரட்டி எமது தேசத்தையும் மீட்டெடுப்போம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நகரில் துப்பாக்கிச்சூடு; சிப்பாய் படுகாயம்!

யாழ்ப்பாணம் —

யாழ்.நகரில் நேற்று இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுப் பிற்பகல் 12.15 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

யாழ். கஸ்தூரியார் வீதியிலுள்ள உதயன் நாளிதழ் அலுவலகத்துக்கு முன்னால் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் காயமுற்ற இராணுவச் சிப்பாய் படுகாயமுற்ற நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் இவர் பலாலி இராணுவ

(08 ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டணி ஆட்சி மலருமா?

## கட்சிகள் எதிர்பார்ப்பு

சென்னை —

தமிழக சட்டப் பேரவைத் தேர்தல் முடிவு எப்படி இருக்கும் என அறுதியிட்டுக் கணிக்க முடியாதநிலை தமிழகத்தில் உருவாகிஉள்ளது. இந்த நிலையில் மாநிலத்தில் கூட்டணி ஆட்சி அமையுமா என்கிற எதிர்பார்ப்பு அரசியல் கட்சி வட்டாரங்களில் மலரத் தொடங்கியுள்ளது.

கூட்டணி ஆட்சி பற்றிய விவாதம் 1980க்குப் பிறகு முதல் முறையாக தற்போதுதான் தமிழகத்தில் எழுந்துள்ளது.

தேர்தல் முடிவுகள் தொடர்பாக நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகளில் பெரும்பாலானவை வெற்றி - தோல்வியை ஓரிரு சதவீத வாக்குகளே நிர்ணயிக்கும் என்கிற ரீதியில் அமைந்துள்ளன.

சில கணிப்புக்களோ எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத என்கிற தகவலை வெளிப்படுத்துகின்றன.

எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், அதிக தொகுதிகளில் வென்ற தனிப்பெரும் கட்சி தனது தோழமைக் கட்சிகள் அல்லது தங்களுக்கு ஒத்த கருத்துள்ள கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைப்பது வழக்கம். அப்படி அமையும் கூட்டணி அமைச்சரவையில் தோழமை அல்லது ஆதரவுக் கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கும்.

1952ஆம் ஆண்டுக்குப் பிறகு கடந்த 54ஆண்டகளில் இத்தகைய காட்சியைத் தமிழகம் கண்டது இல்லை.

நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பாக 1926இல் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது நீதிக் கட்சி பிளவு பட்டிருந்தது. அந்தக் கட்சிக்கு அப்போது 30 இடங்கள் மட்டுமே கிடைத்தன. 'சுயராஜ்யக் கட்சி' கூடுதலான இடங்களைப் பெற்றிருந்தபோதிலும், அதற்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

இந்த நிலையில், சுயேச்சையாக இருந்த டொக்டர்.பி.சுப்பராயனை முதல்வராகவும், சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்த ஏ.ரங்கநாத முதலியார், ஆரோக்கியசாமி முதலியார் ஆகியோரை அமைச்சர்களாகவும் அந்தக் காலத்திலேயே அமைக்கப்பட்டது.

அதற்குப் பிறகு, சுதந்திர இந்தியாவில் முதல் பொதுத் தேர்தல் 1952இல் நடைபெற்றது. அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாகாண சட்டப் பேரவை 375 தொகுதிகளைக் கொண்டதாக இருந்தது.

மொத்தம் 360 தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் 150 இடங்களில் மட்டுமே வென்றது. காங்கிரஸுக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. அந்த நிலையில் காங்கிரஸ் மேலிடம் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் ஆட்சி அமைக்கும் முயற்சியை ராஜாஜி மேற்கொண்டார்.

அதற்குப் பிறகு 28 ஆண்டுகள் கழித்து, 1980இல் கூட்டணி அமைச்சரவை பற்றிய கருத்து விஸ்வரூபம் எடுத்துது. 1980 மக்களவைத் தேர்தலில் மகத்தான வெற்றி பெற்ற தி.மு.க - காங்கிரஸ் கூட்டணி அதே ஆண்டில் பிறகு நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலிலும் நீடித்தது.

மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் 114இல் தி.மு.கவும், 112இல் காங்கிரஸும் போட்டியிட்டன. எஞ்சிய தொகுதிகள் தோழமைக்கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டன. அறுதிப் பெரும்பான்மையுடன் ஒருகட்சி ஆட்சி அமைக்க குறைந்தது 118 இடங்களில் வெற்றி பெற்றாக வேண்டும். ஆனால், 114 இடங்களில் தான் தி.மு.க போட்டியிட்டது. இந்த நிலையில் தங்கள் கூட்டணி வெற்றி பெற்றால், மாநிலத்தில் கூட்டணி ஆட்சி அமையும் என்று தி.மு.க - காங்கிரஸ் கூட்டணியினர் எதிர்பார்த்தனர்.

ஆனால், அந்த எதிர்பார்ப்பு நிலை வேறவில்லை. அந்தத் தேர்தலில் அ.தி.மு.க மகத்தான வெற்றி பெற்று மீண்டும் ஆட்சிக்கு வந்தது.

இந்த நிலையில் கூட்டணி அமைச்சரவை மலருமா என்ற எதிர்பார்ப்பு தற்போது மீண்டும் தலைதூக்கி உள்ளது.




# அ.தி.மு.கவின் ஆட்சியிலிருந்து தமிழகத்தை விடுவியுங்கள்

## என்கிறார் சோனியா காந்தி



கோவை —

அ.தி.மு.க ஆட்சியின் பிடியிலிருந்து தமிழ் நாட்டை விடுவியுங்கள் என்று கோவையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி கூறினார்.

தமிழ் நாட்டுக்கு வருவதென்றால் எனக்கு தனிப்பட்ட மகிழ்ச்சி. ஏனென்றால் என்மீதும், என்குடும்பங்பத்தினர் மீதும் தமிழ் நாட்டு மக்கள் அளவு கடந்த அன்பு வைத்திருப்பது தான் காரணம். கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற நாடாளுமன்ற தோர்தலின்போது ஐக்கிய முற்போக்கு கூட்டணி கட்சிக்கு மிகப்பெரும் வெற்றியை தேடி கொடுத்தீர்கள்.

அதேபோல எதிர்வரும் சட்ட மன்ற தேர்தலிலும் நீங்கள் ஐக்கிய முற் போக்கு கூட்டணிக்கு மகத்தான வெற்றியை தேடி தருமாறு கேட்டுக் கொள்கிறேன். தமிழ் நாட்டில் அமைந்துள்ள கலைஞர் தலைமையில் ஐக்கிய முற்போக்கு கூட்டணிக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது ஐக்கிய முற்போக்கு கூட்டணி கட்சிகள் வெற்றி பெற்று தமிழ் நாட்டில் இருந்து 13 மத்திய மந்திரிகள் மந்திரிசபையில் இடம் பெற்றுள்ளனர். அவர்கள் தமிழ் நாட்டின் வளர்ச்சிக்காகவும், இந்தியாவின் முன்னேற்றத்துக்காகவும் பாடுபட்டு வருகின்றனர். மத்தியிலும் மாநிலத்திலும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு அமைந்தால் தான் மக்களுக்கு நெருக்கத்தை ஏற்படுத்தும். மத்தியில் இணக்கமாக செயல்படும் ஒரு மாநில அரசு தமிழ் நாட்டில் அமைய வேண்டும்.

தற்போது தமிழ் நாட்டில் உள்ள அ.தி.மு.க அரசு தமிழக மக்களுக்கு எந்த நன்மையும் செய்யவில்லை. மத்திய அரசு தமிழக அரசுக்கு எந்த உதவியும் செய்யவில்லை என்று ஜெயலலிதா குற்றம் சாட்டி வருகிறார். ஆனால், உண்மை அது அல்ல. மத்திய அரசு தமிழக அரசுக்கு உதவி செய்வதோடு மட்டுமல்லாமல் ஆதரவையும் அளித்து வருகிறது. தமிழக மக்களின் மொழியான தமிழ் மொழியை செம்மொழியாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

எனவே எதேச்சாதிகார, சர்வாதிகார அ.தி.மு.க அரசின் கைகளில் இருந்து தமிழ் நாட்டை விடுவிக்க வேண்டும். தமிழகத்தின் ஒவ்வொருவரின் நலனுக்காகவும், சிறப்பான எதிர்கால தமிழ் நாட்டிற்காகவும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியை ஆதரிக்க வேண்டும் என்று தமிழக மக்களை கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு சோனியா காந்தி பேசினார்.

# பிரதமர் மன்மோகன்சிங்கை கருணாநிதி மிரட்டுகிறார்

## வை. கோபாலசாமி தெரிவிப்பு



சிவகாசி —

மத்திய கூட்டணியிலிருந்து ம.தி.மு.கவை வெளியேற்றாவிட்டால் ஆதரவை வாபஸ் பெறுவோம் என்று பிரதமரை கருணாநிதி மிரட்டுவதாக வைகோ குற்றம் சாட்டினார்.

தேர்தல் பிரசாரத்தின் போது வைகோ பேசியதாவது-

மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியிலிருந்து ம.தி.மு.கவை வெளியேற்றாவிட்டால் நாங்கள் மத்திய அரசுக்கு ஆதரவு தரமாட்டோம் என்று பிரதமருக்கு கருணாநிதி நெருக்கடி கொடுப்பதாக எனக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இது குறித்து ஒரு ஆங்கில தொலைக் காட்சிக்கு அவர் பேட்டியளித்தார். அவர் செய்யும் பித்தலாட்ட வேலைகளை நான் மக்களிடம் எடுத்து கூறி வருவதால் என் மீது அவருக்கு அவ்வளவு ஆத்திரம். அதனால் தான் இப்படி மிரட்டுகிறார்கள். எங்களை வெளியேற்ற நீங்கள் முயற்சித்துப் பாருங்கள் என வைகோ தெரிவித்தார்.

# அரசில் ம.தி.மு.க நீடித்தால் தி.மு.க வெளியேறிவிடும்

## கருணாநிதி தெரிவிப்பு



சென்னை —

மத்தியில் ஆட்சியில் உள்ள ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் ம.தி.மு.க நீடித்தால், அந்த கூட்டணியில் தி.மு.க இருக்காது என்று தி.மு.க தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபை தேர்தல் அறிவிப்பு வெளியாவதற்குமுன்-மத்தியில் ஆட்சியில் உள்ள ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் வைகோ தலைமையிலான ம.தி.மு.கவுடன் கூட்டணி வைத்துக் கொண்டார். இது ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. மாநிலத்தில் தான் தனது கட்சி தி.மு.க.வுடன் அதிருப்தி கொண்டுள்ளது என்று தெரிவித்த வைகோ, மத்தியில் ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் தொடர்ந்து நீடிப்பதாக தெரிவித்தார். இதற்கு தி.மு.க தலைவர் கருணாநிதி கடும் எதிர்ப்பு தெரிவித்தார். இருந்தாலும், கூட்டணியில் இருந்து ம.தி.க.வை வெளியேற்றுவது பற்றி காங்கிரஸ் கருத்து ஏதும் தெரிவிக்கவில்லை. தமிழக தேர்தல் பிரசாத்தில் தி.மு.கதலைமை மீதும், மத்திய அமைச்சர் தயாநிதி குறித்தும் கடுமையான குற்றச்சாட்டுகளை வைகோ கூறினார்.

இந்த சூழ்நிலையில் சி.என்.என். - ஐ.பி.என். டிவிக்கு கருணாநிதி நேற்று பேட்டி அளித்தார். அதில் அவர் கூறியதாவது-

ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் வைகோ இருந்தால், நாங்கள் அதில் இருக்கமாட்டோம். அவர் அங்கு இருந்தால் தி.மு.க அதில் இருக்காது. அவர் அந்த கூட்டணியில் இருக்கிறாரா, இல்லையா என்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. மத்திய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசையும் அவர் விமர்சித்து வருகிறார். எனவே, அதில் அவர் இருக்ககூடாது.

தமிழகத்தில் காங்கிரசுடன் சேர்ந்து கூட்டணி அரசு அமைக்கும் சூழ்நிலை வந்தால், அதுபோல் செயல்படுவோம். டில்லியில் நாங்கள் கூட்டணி அரசு அமைக்கவில்லையா. டில்கியில் இந்த கூட்டணி அரசு ஆரோக்கியமாக இருக்கும் போது, மாநிலத்தில் ஆரோக்கியமாக இருக்காது என எப்படி கருத முடியும். இவ்வாறு கருணாநிதி கூறினார்.

# டாடாவை மிரட்டிய விடயத்தில் தயாநிதி மீது விசாரணை வேண்டும்

## வெங்கையா நாயுடு தெரிவிப்பு



திருநெல்வேலி —

தயாநிதி மீது மத்திய அரசு விசாரணை நடத்த வேண்டும் என பா.ஜ. துணைத்தலைவர் வெங்கையா நாயுடு நிருபர்களிடம் தி.மு.க, அ.தி.மு.க கட்சிகளுக்கு போதுமான வாய்ப்பு வழங்கியாகிவிட்டது. இரண்டு கட்சிகளும் தேர்தலில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையை இழந்து விட்டார்கள். தமிழகத்தில் தொங்கு சட்ட சபைதான் ஏற்படபோகிறது. எந்தவிதமான அலையும் இல்லை. எனவே ஏராளமான வாக்குறுதிகளை வழங்குகிறார்கள்.

இலவச அரிசி தருவதாக இருந்தால் ஜெயலலிதா ஏன் தனது ஆட்சியில் தற்போது தரவில்லை. இரண்டு ஏக்கர் நிலம் தருவதாக இருந்தால் கருணாநிதி தனது முந்தைய ஆட்சிகளில் அதனை தராதது ஏன். பொதுமக்கள் வீதி, சுகாதார வசதி, கல்வி என அடிப்படை தேவையையும் நிறைவேற்றாமல் வெறுமனே 24 மணிநேரமும் ரி.வியை பார்த்துக்கொண்டிருந்தால் போதுமா. ஆனால் பா.ஜ. அனைத்து அடிப்படை தேவைகளை நிறைவேற்றும்.

தமிழகத்தை சேர்ந்த 13 மத்திய அமைச்சர்கள் தமிழகத்திற்காக எதையும் செய்யவில்லை. மதமாற்றம் தடை செய்யப்பட வேண்டும். மதமாற்றத்துக்காக வெளிநாட்டில் இருந்து வரும் பணம் தடுக்கப்படவேண்டும். மதவாத இயக்கங்களைத் தடுக்கவேண்டும். அணுகுண்டு சோதனை நடத்தியதன் மூலம் பாரதத்தை உயர்த்திக் காட்டினோம். பா.ஜ.ஆட்சியில்தான் பல்வேறு துறைகளில் வளர்ச்சியை ஏற்படுத்தினோம்.

ம.தி.மு.கவும் தி.மு.கவும் சந்தர்ப்பவாத கட்சிகளாக உள்ளன. மத்திய அரசு எந்த நேரத்திலும் கவிழலாம். காங்கிரஸ் கட்சி தற்போது பல கூறுகளாக பிரிந்துகிடக்கிறது. கம்பியூனிஸ்ட் கட்சிகள், திராவிடக்கட்சிகளும் இப்படித்தான் பிரிந்து கிடக்கின்றன. தேர்தலுக்கு பிறகு பெற்றோல் உள்ளிட்ட எரிபொருள்களின் விலை உயரப்போகிறது.

டாடா நிறுவனத்தை தயாநிதி மிரட்டியதை விவகாரத்தை நாடாளுமன்றில் எழுப்புவோம். அவர் அந்த துறையில் இருந்து விலக வேண்டும். அவர்மீது மத்திய அரசு விசாரணை நடத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

நிறைஞ்சனாஸ் சங்கானை
சத்தியராஜ் ரோஜா நடித்த
எங்கிருந்தோ வந்தான்
காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

ராஜா யாழ்ப்பாணம்
புதுவருட வெளியீடு
பரத்,
மல்லிகா கபூர்
மற்றும் பலர்
நடித்த
அழகாய் இருக்கிறாய்
பயமாய் இருக்கிறது
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
நேரம் : 10.30,2.30,6.30,9.30



மனோகரா
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின அதிரடி வெளியீடு
அஜித்குமார், சதா மற்றும் பலர் நடித்த
மூன்றாவது வெற்றி வாரம்
திருப்பதி
இயக்கம் : பேரரசு
காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30




சிறுவிளம்பரம்
விற்பனைக்கு
ஜேர்மன் செப்பேட் (German Shepher) (அல்சேசன்) பெடிகிறி (Pedigree) விற்பனைக்குண்டு. மேலும் குளிர்சாதனப் பெட்டி, T.V, C.D றேடியோவும் பிளேயரும் மற்றும் கதிரை, மேசை, ட்ரோவிங் றூம் செட் (Drawing Room Set) மற்றும் பல விற்பனைக்குண்டு.
தி.நடராஜா சட்டத்தரனி
டச்சுறோட் தொல்புரம்,
சுழிபுரம்.
[2257] தொலைபேசி: 077 3276536

வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு
யாழ் மணிக்கூட்டு வீதி பெருமாள் போவிலடியில் ஒரு பரப்புக்காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இல:0779086864

# சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு நாட்டைத் தாரைவார்க்க முடியாது

## என்கிறது ஜாதிக ஹெல உறுமய



கொழும்பு —

சமாதானத்தை அடையவேண்டும் என்பதற்காக விடுதலைப் புலிகளுக்கு நாட்டைத் தாரை வார்த்துக் கொடுக்க முடியாதென ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளதாவது -

அரசசார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச சமூகம் மற்றும் சர்வதேச ஊடகங்கள் என்பன விடுதலைப் புலிகளைப் பலப்படுத்தி வருகின்றன. இதன்படி சில செய்தி நிறுவனங்கள் கொழும்பு அரசாங்கமெனக் குறிப்பிடுகின்றன. ஆனால், அவ்வாறு ஒன்று இல்லை. பொதுவாக இலங்கை அரசாங்கமேயுள்ளது.

அமெரிக்கா கூடப் புலிகள் தொடர்பாக உரிய முறையில் செயற்படவில்லை. இலங்கையில் இனப் பிரச்சினை என்று ஒரு விடயமே இல்லை. கடந்த பல வருடங்களாகச் சிங்களவர்களும், தமிழர்களும் ஒற்றுமையாகவே வாழ்ந்துள்ளனர்.

இன்று தென்னிலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் வட - கிழக்கில் மேற்கொள்ளப்பட முடியாத நிலையே காணப்படுகிறது. அங்கு காணப்படும் பிரச்சினையே இதற்குக் காரணமாகும்.

புலிகளின் தாக்குதலுக்கு மத்தியிலும் இராணுவம் பொறுமை காத்து வருகிறது. நாட்டைப் பாதுகாப்பதற்கு இராணுவம் தேவையென அவர் மேலும் தெரிவித்தார்.

# புலிகளின் ஊடுருவல் குறித்து அவதானமாக இருக்கவேண்டும்

## எச்சரிக்கிறார் மல்லவராச்சி

கொழும்பு —

கொழும்பில் புலிகள் ஊடுருவல் குறித்து இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் என் மல்லவராச்சி எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது -

கொழும்புக்கு வரும் வெளிநபர்கள் குறித்துப் பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

வேலை கேட்டும், பழைய செய்தித்தாள்களைச் சேகரிப்பதாகவும் கூறி வருகின்ற நபர்கள் சந்தேகத்துக்குரிய வகையில் நடமாடினால் அருகாமையிலுள்ள பொலிஸ் நிலையத்திலோ, படைத்தரப்பினரிடமோ தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

# அவிசாவளையில் மீட்கப்பட்ட 2 சடலங்கள் இனங்காணப்பட்டன

கொழும்பு —

அவிசாவளையில் கடந்த மாதம் தலையில்லாமல் கண்டுபிடிக்கப்பட்ட ஐந்து சடலங்களில் இருவரது சடலங்கள் அடையாளம் காணப்பட்டன.

அவிசாவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புவாக்கப்பிட்டி மற்றும் தெகியோவிட்ட ஆகிய இடங்களில் கடந்த மாதம் 27 ஆம் திகதி தலை துண்டிக்கப்பட்ட நிலையில் ஐந்து சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

கோரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட ஐந்து பேரில் இருவர் வன்னியில் இருந்து தொழில் நிமித்தம் அவிசாவளைப்பகுதிக்குச் சென்றபோது படுகொலை செய்யப் பட்டுள்ளனர்.

இருவரில் கந்தையா குணசிங்கம் என்பவர் மாங்குளம் பனிக்கம் குளத்தைச் சேர்ந்தவர் என்றும், துணுக்காய் கல்விளானைச் சேர்ந்த நவரட்ணம் நவநீதன் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# இலங்கை பொலிஸாருக்கு சவூதியில் பயிற்சி

றியாட் —

சவூதி அரேபியாவின் நய்ப் அராப் பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு விஞ்ஞான கற்கைநெறி பீடத்தில் இலங்கைப் பொலிஸ் அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்கப்படவுள்ளது.

நெனஸ் எனப்படும் இந்த பல்கலைக்கழகம் உயர்ந்தபட்ச பயிற்சியை வழங்கிவருகிறது. இங்கு இலங்கை பொலிஸாருக்கு விசேட பயிற்சி வழங்குவது குறித்து சவூதியிடம் உதவி கோரப்பட்டுள்ளது.

இங்கு ஆங்கிலத்தில் பயிற்சிகள் வழங்கப்படுவதால் - இலங்கை பொலிஸ் அதிகாரிகளுக்கு எந்தவித தொடர்பாடல் பிரச்சினையும் இருக்காது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# அக்கரைப்பற்றில் ஹர்த்தால்

கொழும்பு —

தென்கிழக்கில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஹுசைன் மொகமட் மீதான தாக்குதலைக் கண்டித்து அக்கரைப்பற்றில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முழு அளவிலான ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனால் ஒலுவில் மற்றும் அக்கரைப்பற்றில் இயல்புநிலை பாதிக்கப்பட்டது.

கடைகள் மூடப்பட்டு போக்குவரத்துகள் நிறுத்தப்பட்டிருந்தன. கிழக்குப் பல்கலைக்கழகம் எதிரில் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

இதனிடையே மூன்றாம் நாளாக நேற்று முன்தினம் கிழக்குப் பல்கலைக் கழக கல்விசார் மற்றும் நிர்வாகம்சார் பணியாளர்கள் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்தினர்.

# பெண் ஊடகவியலாளர் பிணையில் விடுதலை

கொழும்பு —

கொழும்பில் கைது செய்யப்பட்ட தமிழ்ப் பெண் ஊடகவியலாளரான சிவரம்யா சிவானந்தன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையின் அறிவிப்பாளராகவும், கொழும்பு டி.எஸ்.சேனநாயக்க வித்தியாலயத்தின் ஆசிரியராகவும் அவர் பணியாற்றி வந்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க நினைவு மண்டபத்தில் நடைபெற்ற உலக ஊடக சுதந்திர நாள் நிகழ்வுக்குச் சென்ற அவர் உரிய அழைப்பிதழ் இல்லாத காரணத்தால் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவரிடம் விசாரணை நடத்திய பொலிஸார் அவரை கொழும்பு மேலதிக நீதிபதி ஜயந்த பிரேமச்சந்திரவிடம் முன்னிலைப்படுத்தினர்.

உரிய ஊடக ஆவனங்கள் இருந்தபோதும் அவரைப் பொலிஸார் கைது செய்திருப்பதாக சிவரம்யா சிவானந்தனின் சட்டத்தரணி பி.நவராஜா நீதிமன்றில் கூறினார்.

கைது செய்யப்பட்ட ஊடகவியலாளர் எந்தவித குற்றச் செயல்களோடும் தொடர்புடையவராக இல்லை என்றும், அவருக்கான பிணையை ஆட்சேபிக்கவில்லை என்றும் பொலிஸார் சார்பில் கூறப்பட்டது.

இதையடுத்து அவரை 5 ஆயிரம் ரூபா பிணையில் விடுதலை செய்ய நீதிபதி உத்தரவிட்டார். இந்த வழக்கில் மே 9 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றில் சிவரம்யா சிவானந்தன் முன்னிலையாக உத்தரவிட்டப்பட்டது.

# மனித உரிமைகள் பாதுகாப்பு இலங்கை அரசு மீது அதிருப்தி

கொழும்பு —

மனித உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக இலங்கை அரசாங்கம்மீது ஆசிய மனித உரிமை அமைப்பான ஃபோரம் ஏசியா அதிருப்தி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிய கடிதத்தில், மனித உரிமைகளைப் பாதுகாக்கும் கடமைகளில் அரசாங்கம் தவறியிருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மேலும், இலங்கை அரசாங்கமானது - மனித உரிமைகளை எப்படிச் செயற்படுத்தப் போகிறது என்பது தொடர்பாக எந்தவித தெளிவான விளக்கம் ஏதுமில்லாமல் பொதுவாக மேலோட்டமாக இலங்கை அரசாங்கம் உறுதியளித்திருப்பதாகவும் அந்த அமைப்பின் நிர்வாக இயக்குநர் அன்ஸ்லிமோ லீ தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான பல்வேறு விளக்க கேள்விகளையும் ஜனாதிபதி மகிந்தவுக்கு அந்த அமைப்பு அனுப்பிவைத்துள்ளது.

மனித உரிமைகளைச் செயற்படுத்துவதாக அரசாங்கம் சட்டபூர்வமாகக் கூறாத நிலையிலும் சர்வதேச சமூகத்தின் முன்பாக நடைமுறைப்படுத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இராணுவம் குறித்த இரகசிய தகவல்கள் வெளிச்செல்லாமல் தடுக்க நடவடிக்கை

கொழும்பு —

இராணுவத்துக்குத் தேவையான ஆயுதக்கொள்வனவு உட்பட்ட விடயங்கள் தொடர்பான மிகவும் இரகசியமான தகவல்கள் வெளியே செல்லாமல் தடுப்பதற்குக் கடுமையான நடவடிக்கை மேற்கொள்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அரசு - பாகிஸ்தானிடமிருந்து கொள்வனவு செய்யவுள்ள ஆயுத விபரங்கள் குறித்து இந்திய பத்திரிகைகளிலும், இணையத்தளங்களிலும் வெளியாகி இருந்தன. இதுகுறித்து வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இந்த விடயங்கள் வெளிச்செல்வதைத் தடுக்க உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இந்த இரகசியத் தகவல்கள் வெளிநாடுகளுக்கும், ஊடகங்களுக்கும் செல்வது தேசிய பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலென அமைச்சரவையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (தே)

# கொழும்பு மாநகரசபைத் தேர்தல் ஐ.தே.கட்சியின் மனு தள்ளுபடி

கொழும்பு —

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை எதிர்த்து தலைமை நீதிமன்றத்தில் தொடரப்பட்ட மனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஐ.தே.கவின் மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்து தீர்ப்பளித்திருந்தது. இதை எதிர்த்து ஐ.தே.க வழக்குத் தொடர்ந்திருந்தது.

அதேபோல் கம்பஹா மாநகர சபை தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பிலும், சுயேட் சைக்குழுவினர் சார்பிலும் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களையும் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இந்த மனுக்கள் நீதிபதிகள் நிஹால் ஜயசிங்க, என்.ஈ.திசநாயக்க மற்றும் ராஜ பெர்னாண்டோ ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

நீதிமன்ற நடவடிக்கைகள் தோல்வியடைந்ததையடுத்து தேர்தலில் போட்டியிடுவதற்கு சுயேட்சைக்குழுவுடன் ஐக்கிய தேசியக் கட்சி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

ஐ.தே.கவின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதையடுத்து இந்த ஒப்பந்தத்தை ஐ.தே.க. ஏற்படுத்தியுள்ளது.

ஐ.தே.கவினருக்காகச் சுயேட்சைக் குழுவிலுள்ள 50 உறுப்பினர்கள் விலகிக்கொள்ள ஒப்புக்கொண் டுள்ளனர். இருப்பினும் 9 பேர் விலக மறுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



வவுனியா வைரவப் புளியங்குளத்தில் நேற்று முன்தினம் பொலிஸார்மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் காயமடைந்த பொலிஸாரை முதலாவது படத்திலும் - அதனைத் தொடர்ந்து பொதுமக்களை இராணுவத்தினர் சோதனையிடுவதையும் காணலாம்.

# அரச நிறுவனங்களின் தலைவர்களை பதவி நீக்க ஜனாதிபதி மகிந்த முடிவு!

கொழும்பு —

அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள் என்பவற்றின் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர்களென பத்து பேர் வரையானோரை எதிர்வரும் 20 ஆம் திகதிக்குப் பின்னர் பதவியிலிருந்து நீக்குவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.

முறையற்ற நிதிக்கொடுக்கல் வாங்கல்கள், குறிப்பிட்டளவுக்கு மேல் வாகனங்களைப் பயன்படுத்தியமை, திறமையின்மை போன்ற காரணங்களின் அடிப்படையில் இவர்களைப் பதவி நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அந்த தகவல்கள் தெரிவித்தன.

குறிப்பிட்ட சபையொன்றின் இரண்டு உயர் அதிகாரிகளை கிடைத்த முறைப்பாடு தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதி விசேட விசாரணைப் பிரிவில் மூன்று குழுக்களை ஈடுபடுத்தி விசாரணை மேற்கொள்ளப் படுவதுடன், இது குறித்த விசாரணை அறிக்கையை ஒருவார காலத்துக்குள் ஒப்படைக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். (தே)

## நெல்லியடி இளைஞர்கள் படுகொலை

# வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு விளக்கம்

கொழும்பு —

நெல்லியடியில் ஏழு அப்பாவி இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதன் உண்மைப் பின்னணி என்பது குறித்து கொழும்பிலுள்ள அனைத்து வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விளக்கக் கடிதம் அனுப்பியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு சார்பில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது -

வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ்ப் பொதுமக்கள் முகம்கொடுத்து வருகின்ற சூழ்நிலைகளைத் தொடர்ந்து இந்தக் கடிதத்தை அனுப்புகின்றோம்.

யாழ். இராஜ கிராமத்தைச் சேர்ந்த ஏழு இளைஞர்கள் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அரச படைகளின் இராணுவ நடவடிக்கையில் படுகொலை செய்யப்பட்டனர்.

நெல்லியடியிலுள்ள இராணுவ முகாம் மீது இந்த இளைஞர்கள் கைக்குண்டு வீசியதாக அரசாங்கப் படைகள் தெரிவித்துள்ளன. மேலும் இந்த ஏழு இளைஞர்களும் விடுதலைப் புலிகள் என்றும், இராணுவ முகாம் மீதான தாக்குதலுக்கானப் பதில் நடவடிக்கையிலேயே அவர்கள் கொல்லப்பட்டனர் என்றும் அரசாங்கம் தெரிவிக்கிறது.

அரசாங்கத்தின் இந்தப் பரப்புரை பொய்யானது,

இராணுவத்தால் படுகெலை செய்யப்பட்ட ஏழு பேரும் விடுதலைப் புலி உறுப்பினர்கள் அல்ல. அப்பாவி இளைஞர்களே.

படுகொலை செய்யப்பட்டோர் விபரம் -

செல்வராஜா சுமன்(வயது 22), வேலுப்பிள்ளை நிர்மலன்(வயது 21), நாகரட்ணம் நகுலேஸ்வரன்(வயது 18), பாலச்சந்திரன் கிருஸாந்தன் (வயது 18), தாமோதரம்பிள்ளை சர்மிலன்(வயது 17), சுப்பிரமணியம் சுபாஸ் (வயது 19) அப்பாவி இளைஞர்கள் கொல்லப்படுவதற்கு 20 நிமிடத்துக்கு முன்பாக முகாம் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடந்துள்ளது. படுகொலை செய்யப்பட்ட இளைஞர்களுக்கும், கைக்குண்டுத் தாக்குதலுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. நெல்லியடியிலுள்ள நிகழ்ச்சி ஒன்றுக்காகப் பொலிஸ் நிலையம் மற்றும் இராணுவ முகாமைக் கடந்து சென்றபோதே அவர்கள் இலக்கு வைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவ முகாமைத் தாக்கியோர் மீதான இராணுவ நடவடிக்கை இது அல்ல. அப்பாவி மக்களைப் பழி வாங்கும் ஒரு நடவடிக்கை இது.

இத்தகைய படுகொலைகளை அரச படைகள் நடத்துவது இதுவே முதல் முறையும் அல்ல. நீதிக்குப் புறம்பான படுகொலைகளை அப்பாவி மக்களைத் தொடர்ந்து படைகள் படுகொலை செய்து வருகிறது. ஜெனிவாப் பேச்சுக்களுக்குப் பின்னரான நீதிக்குப் புறம்பான படுகொலைகளைத் தங்களுக்குச் சுட்டிக் காட்டுகிறோம்.

திருகோணமலையில் 20 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை, யாழ். புத்தூரில் ஐந்து தமிழர்கள் படுகொலை, உதயன் நாளிதழ் அலுவலகம் மீதான தாக்குதல், திருகோணமலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகி தேசியப் பட்டியலில் இடம்பெற்றிருந்த வ. விக்னேஸ்வரன் படுகொலை, வவுனியாவில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பிரதித் தலைவர் ஏ. செந்தில்நாதன் சுட்டுப் படுகொலை எனப் பல்வேறு படுகொலைச் சம்பவங்களை அரச படைகள் நடத்தியுள்ளன.

ஜெனிவாப் பேச்சுக்களுக்கு முன்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், திருகோணமலையில் ஐந்து தமிழ் மாணவர்கள் படுகொலை என அரச படைகள் மற்றும் அதனுடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினரால் படுகொலைகள் நடத்தப்பட்டன.

வடக்கு - கிழக்கில் வாழும் அப்பாவித் தமிழ் மக்களை, ஒரு அச்ச நிலையில் வாழ வைத்து, தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்த இத்தகைய நீதிக்குப் புறம்பான படுகொலைகளை அரசாங்கப் படைகள் மேற்கொள்கின்றன.

இத்தகைய படுகொலைகளை முடிவுக்குக்கொண்டு வர அரசாங்கத்தைத் தாங்கள் வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம் என்ற அதில் கூறப்பட்டுள்ளது.

## பாதுகாப்பை கடுமையாக்க புதிய சட்டம் அமுலுக்கு வரும்

கொழும்பு —

தேசிய பாதுகாப்பைக் கடுமையாக நடைமுறைப்படுத்துவதற்காக அரசாங்கம், தேசிய தேசப்பற்றுச் சட்டம் எனும் பெயரில் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இது தொடர்பான சட்டப்பிரதியைத் தயாரிப்பதற்கு அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள், சட்டவாளர்கள், சட்டவரைபு திணைக்கள அதிகாரிகளுக்கிடையிலான ஆரம்பக்கட்ட பேச்சுக்கள் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த சட்டத்துக்கமைய, தேசியபாதுகாப்புடன் தொடர்புடைய தகவல்களை அறிந்து வைத்திருப்பவர்கள் அவற்றை படையினருக்குத் தெரிவிக்காது விடின், குற்றமாக கருதப்படுமென தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் ஊடகங்களில் தகவல்கள் ஏதாவது வெளியிடப்படுமாக இருந்தால், அந்தத் தகவல்களைப் பெற்றுக்கொண்ட ஆரம்ப இடத்தைத் தெரிவிப்பதற்கும் அழுத்தம் கொடுக்கும் சட்டமும், இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

தற்போது இவ்வாறான சட்டம் அமெரிக்கா, பிரிட்டன் உட்பட பல நாடுகளில் செயற்படுத்தப்படுகின்றன.

அமெரிக்க நாட்டில் உள்ளதைப்போன்ற சட்டம், இலங்கையிலும் தயாரிக்கப்படுமென தகவல்கள் தெரிவிக்கின்றன.

## திடீர் பொதுத் தேர்தலுக்கு ஜாதிக ஹெலஉறுமய எதிர்ப்பு

கொழும்பு —

பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்காகத் தென்னிலங்கையிலுள்ள அனைத்து ஜனநாயக சக்திகள் பொது அமைப்புகள் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள இந்தவேளையில் - பொதுத் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் அதன் மூலம் நாட்டில் தீமையான பெறுபேறே கிடைக்கக் கூடுமெனவும், இதனால் விடுதலைப் புலிகளுக்கே அதிக அனுகூலம் கிடைக்குமெனவும் ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளதாவது -

திடீர் தேர்தலை நடத்துவது தொடர்பாக எந்த வகையிலும் உடன்படமுடியாது. தேர்தலுக்குச் செனறால் கட்சிகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள இணக்கப்பாடு முறிவடையும்.

குறிப்பாக நாடாளுமன்றில் அரசாங்கத்துக்குத் தேவையான ஆதரவு கிடைக்கும். எனவே திடீர் பொதுத் தேர்தலை நடத்த வேண்டிய அவசியமில்லை.

திடீர் பொதுத்தேர்தலை நடத்தி அரசின் பலத்தைப் பெருக்க வேண்டுமென சில அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

நாட்டின் பாதுகாப்பு தொடர்பாகத் தற்போது ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் தேர்தல் மூலம் முழுமையாக சிதறடிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (தே)

## தற்கொலை குண்டுதாரியுடன் உரையாடிய இராணுவ மேஜர் தொடர்பாக விசாரணை

கொழும்பு —

கொழும்பு இராணுவ தலைமையகத்தில் இராணுவத் தளபதியை இலக்கு வைத்து தாக்குதல் நடத்திய பெண் தற்கொலைதாரியுடன் சம்பவம் நடைபெற்ற சிறிது நேரத்துக்கு முன் உரையாடிய இராணுவ மேஜர் யாரென கண்டறிவதற்கு இரகசியப் பொலிஸார் பரந்தளவில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தப் பெண் சம்பவம் நடைபெறுவதற்கு முன் வைத்தியசாலைக்கு முன்பாக இராணுவ மேஜர் ஒருவருடன் உரையாடிக்கொண்டிருந்ததாகவும், அவர் குறித்த பெண்ணின் தலையை தடவியதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளதாக இரகசிய பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மருத்துவ பரிசோதனைக்காக வந்த பெண்ணொருவர் இந்த தகவலை இரகசியப் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

குறித்த பெண் இரகசிய பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கமைய பெண் தற்கொலைதாரியுடன் உரையாடிக் கொண்டிருந்த இராணுவ மேஜரைக் கண்டு பிடிப்பதற்கு விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குண்டு வெடிப்பதற்கு 20 நிமிடங்களுக்கு முன்னர் குறித்த இராணுவ மேஜர் - பெண் தற்கொலைதாரியுடன் உரையாடிக்கொண்டிருந்தார். எனினும் குறித்த இராணுவ மேஜரைக் கண்டுபிடிக்க முடியவில்லையெனவும் அந்த அதி காரி தெரிவித்தார்.

இதேவேளை - இராணுவ தலைமையக மருத்துவமனையிலுள்ள தாய்மார் பரிசோதனை நிலையத்துக்குப் பெண் தற்கொலை குண்டுதாரி சென்றிருக்கவில்லை என்பது இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

கடந்த 25 ஆம் திகதி குண்டு வெடித்த தினத்தன்று நடைபெற்ற தாய்மார் ஆய்வு நிலைய சிகிச்சையில் பங்கேற்ற தாய்மாரின் பெயர்ப் பட்டியல் அடங்கிய விபர பதிவேட்டிலிருந்து இது தெரிய வந்துள்ளது.

குண்டுதாரி இராணுவ தலைமையகத்துக்கு எவ்வாறு வந்தாரென்பது இது வரை மர்மமாகவே உள்ளது. எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தற்போதைய நிலைமைகளை ஜே.வி.பி அவதானித்து வருகிறது

## விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு —

சமாதானச் செயற்பாடுகள் தொடர்பாகவும், அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்தும், விடுலைப் புலிகளின் பதிலை, அரசாங்கம் எதிர்பார்ப்பது போலவே தற்போதைய நிலைமைகளை ஜே.வி.பியும் அவதானித்து வருவதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளதாவது -

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தயாராக உள்ளதாக அறிவித்து வருகின்றபோதிலும், புலிகளிடமிருந்து இதுவரை எந்தவித பதிலும் கிடைக்கவில்லை.

கடந்த தேர்தலில் எமது கட்சிக்கு மேலதிகமான ஒரு சபையையும் கைப்பற்றும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. எனினும், அரசாங்கத்தில் எமது செல்வாக்குக் குறையவில்லை. நாம் வழமை போன்று அரசுக்கான எமது ஆதரவையும், அழுத்தங்களையும் தெரிவித்து வருகிறோம்.

கடந்த தேர்தல் மூலம் நாம் சிறந்த முறையில் முன்னேற்றமடைந்துள்ளோம். தேர்தல் முடிவுகளை உன்னிப்பாக அவதானித்தால் இந்த விடயம் தெரியவரும்.

இந்த நிலையில் எமது அரசியல் நடவடிக்கைகளைச் சிறப்பான முறையில் முன்கொண்டு செல்வோம் எனத் தெரிவித்தார்.

## சந்தேக நபரை விடுவிக்க முயன்ற பொலிஸார் குறித்து விசாரணை

கொழும்பு —

வத்தளைப் பிரதேசத்தில் கடந்த முதலாம் திகதி மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டவர்களில் விடுதலைப் புலிகளின் தகவல் வழங்குனர் ஒருவரை பொலிஸாரின் பிடியிலிருந்து விடுவித்துக்கொள்ள முயற்சித்த பொலிஸ் சப் இன்ஸ் பெக்டர் ஒருவர் குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகத்துக்குரிய நபர் கொட்டாஞ்சேனையைச் சேர்ந்தவர். அந்த நபரால் பொலிஸாரின் பிடியிலிருந்து விடுவிக்க முயன்றவர் விடுதலைப் புலிகளின் மக்கள் படையில் பயிற்சி பெற்றவர் எனக் கூறப்படுகிறது.

வத்தளையில் கடந்த முதலாம் திகதி மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது 64 பேர் கைது செய்யப்பட்டனர். இதில் 5 பெண்களும் அடங்குவர். இவர்களில் மூன்று பெண்கள் உட்பட 55 பேர் விசாரணைகளின் பின்னர் அன்றைய தினமே விடுவிக்கப்பட்டனர்.

ஏனைய இரு பெண்களும் மறு நாள் விடுவிக்கப்பட்டனர். ஏனைய 7 பேரும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டு பொலிஸ் சப் இன்ஸ் பெக்டர் விடுதலைக்கு முயற்சிக்கப்படும் சந்தேக நபர் இந்த ஏழு பேரில் ஒருவராவார். அந்த சந்தேக நபர் புளியங்குள த்தைச் சேர்ந்தவ்ரெனக் கூறப்படுகிறது.

## விசாரணைக்கு அழைக்கப்பட்ட இளைஞர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு —

அம்பாறை திருக்கோவிலில் அதிரடிப்படையினரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர் நேற்று முன்தினம் காலை சடலமாக மீட்கப்பட்டார். கடந்த வியாழக்கிழமை இரவு திருக்கோவில் - 02 ஆம் பகுதியில் வசிக்கும் பாக்கியராசா ராஜ்குமார் (வயது 27) என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். அதிரடிப்படையினரும், ஒட்டுக்குழுவினரும் விசாரணை எனக் கூறி இவரை அழைத்துச் சென்றனர்.

நேற்று முன்தினம் காலை தம்பிலுவில் காயத்ரி கோயிலுக்குப் பின்னால் சூட்டுக் காயங்களுடன் இவர் சடலமாக மீட்கப்பட்டார். இதனையடுத்து நேற்று முன்தினம் திருக்கோவில் பிரதேசத்தில் கடைகள் பூட்டப்பட்டு, ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் அரச அலுவலகங்கள், பாடசாலைகள் என்பன இயங்கவில்லை.

## சேது சமுத்திரதிட்டம் சூழலுக்கு ஆபத்து

### இலங்கை அரசு அச்சம்

கொழும்பு —

22 சேதுசமுத் திரக் கால்வாய்த் திட்டம் சுற்றுச் சூழலுக்குக் கேடு விளைவிக்கும் என்று இலங்கை அரசு அச்சம் தெரி வித்துள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பாக இந்திய- இலங்கை அதிகாரிகளின் குழுக்களிடையே புதுடெல்கியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இந்தக்கருத்து தெரிவிக்கப்பட்டதாக இந்திய வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## பிணை மனு நிராகரிப்பு

கொழும்பு —

போலி விசாக்களைப் பயன்படுத்தி அமெரிக்காவுக்குச் செல்ல முயன்றவர்களுக்கான பிணை மறுக்கப்பட்டுள்ளது.

போலி விசா மூலம் வெளிநாடு செல்ல முயற்சித்தவர்கள் மீதான வழக்கு நீர்கொழும்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இந்த வழக்கில் தங்களுக்குப் பிணை கோரி கைதானோர் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 12 சந்தேக நபர்களுக்கு பிணை வழங்குமாறு அவர்களின் சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்தனர்.

ஆனால், குடிவரவு - குடியகல்வு சட்டத்தின் 45 ஈ பிரிவின் கீழ் அவர்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நிலையில் அவர்களை விடுதலை செய்ய முடியாது என்று நீர்கொழும்பு நீதிபதியும், மேலதிக மாவட்ட நீதிபதியுமான காந்தி வணிகசேகர தெரிவித்தார்.

மேலதிக விசாரணை அறிக்கையை எதிர்வரும் 18 ஆம் திகதி தாக்கல் செய்யுமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

# யாழ். ஆயரின் அறிக்கை குறித்து
# தமிழ் மாணவர் ஒன்றியம் கவலை

யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாடெங்கும் இராணுவ அட்டூழியங்கள் அதிகரித்து தமிழ் மக்கள் தமது அன்றாட வாழ்வை நகர்த்துவதற்கு அல்லற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

சிங்கள இராணுவம் கண்மூடித்தனமாக தமிழ் மக்களை அழித்து ஊழித்தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கிறது. இராணுவ அராஜகங்கள் அதிகரித்திருக்கும் இந்த வேளையில் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டுமென அறிக்கை வெளியிட்டுள்ளது எமக்கு கவலையளிப்பதாக யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

புரிந்துணர்வு ஒப்பந்தமென்பது யுத்தகாலத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்வுக்கு உருவாக்கப்பட்டது. அரசும் தமிழ்த் தரப்பும் யுத்தம் செய்யாமல் இருப்பதென இணங்கி உருவாக்கப்பட்டது. ஆனால் இராணுவம் அதை மோசமாக மீறி தமிழ்மக்களை அழித்து தமிழர்களைச் சீண்டி வருகிறது.

ஒப்பந்தத்தைப் பொறுத்தவரையில் தமிழ்த் தரப்பு பொறுமையைக் கடைப்பிடித்து வருகின்றபோதும் சிங்கள இராணுவத்தரப்பு அதனை மிக மோசமாக மீறி வருகிறது என்பதை தமிழ் மக்களும், சர்வதேசமும் நன்கறியும்.

அட்டூழியங்களைப் பொறுக்காது கிளர்ந்தெழுந்த மக்களின், மாணவர்களின் உணர்வெழுச்சியே இன்று படைகளைக் கொல்கிறது. அதற்கு அடிப்படையாக இருப்பது மக்கள் மீதான இராணுவத்தின் வன்முறைகளேயாகும்.

தமிழ் மக்கள் மீதான படுகொலைகளை இராணுவம் தொடருகின்ற வேளையில் இராணுவத்தின் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்படுவது ஒரு போதும் இல்லை என்பதை அனைவரும் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

அதைவிடுத்து பின்னணியில் ஒரு சக்தி இருக்கிறது என்ற தொனியில் யாழ். ஆயரின் அறிக்கை எமக்கு அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்தி நிற்கிறது.

ஆயரின் அனுதாபம் மக்களை ஆறுதல்படுத்திவிட முடியாது. அதிகரித்த இராணுவத்தின் அட்டூழியங்கள் நிறுத்தப்படும் போதுதான் தமிழ் மக்கள் நிம்மதி மூச்சு விடுவார்கள்.

குடாநாட்டில் ஒரு இராணுவம் இருப்பதையும் தமிழ் மக்கள் ஒரு போதும் விரும்பவில்லை. ஒரு இராணுவம் எம் மண்ணில் இருந்தாலும் அதுவரை இராணுவத்தின் மீது தாக்குதல் நடத்துவோம்.

எதிர்காலத்தில் இராணுவத்தின் மீது பாரிய தாக்குதலை நடத்த மாணவர்களாகிய நாங்கள் திட்டமிட்டுள்ளோம்.

உண்மையான நிலையையும், தமிழ் மக்களின் நியாயமான நிலையையும், மாணவர்களாகிய எமது உறுதியான நிலைப்பாட்டையும் விளங்கிக் கொள்ளவேண்டியது சமூகப் பெரியவர்களது பொறுப்பு. நடுநிலை தவறி தமிழ் சமூகம் அழிவுப் பாதைக்குச் செல்ல எவரும் அனுமதிக்கக்கூடாது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சுதந்திர ஊடகதினத்தை முன்னிட்டும் சுதந்திர ஊடகத்திற்காக உயிர் விட்ட தமிழ் உறவுகளை நினைவு கூர்ந்தும் யாழ் பொது நூலகத்தில் மரம் நாட்ட நிகழ்வு கடந்த வாரம் (03.05.2006) இடம் பெற்றது.

வட இலங்கையின் பத்திரிகையாளர் சங்க ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் நிழல் தரும் மரங்களினை யாழ் மாநகர சபை ஆணையாளர் சி.வி.கே. சிவஞானம் நாட்டிவைத்தார்.

# நோயாளரை பார்வையிடும் நடைமுறை அறிவிப்பு

யாழ்ப்பாணம் —

யாழ். போதனா வைத்தியசாலையின் நோயாளர்களை பார்வையிடும் நேரங்களின் நடைமுறை எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

எனவே, நோயாளர்களை பார்வையிட வரும் எந்தவொரு பார்வையாளரும் ஒரு நோயாளருக்கு வழங்கப்படும் 4 அனுமதி சீட்டு (பாஸ்) அட்டைகளில் ஏதாவது ஒன்றைப் பெற்று காட்டியே நோயாளர் இருக்கும் விடுதிக்கு உள்நுழைய முடியும். அத்துடன் ஒரு நோயாளரை ஒரே நேரத்தில் நால்வரே பார்வையிட முடியும் என யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை தற்போதைய நிலைமையை கருத்தில் கொண்டு பாதுகாப்பின் பொருட்டு தனியார் சேவையாக யாழ். போதனா வைத்தியசாலையால் வழங்கப்பட்ட அம்புலன்ஸ் சேவையை பொதுமக்களுக்கு வழங்க முடியாதுள்ளது என்பதை அறியத் தருவதுடன் இந்த விடயம் சம்பந்தமாக அரசாங்க அதிபருக்கும் அறிவித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கணக்காளராகக் கடமையாற்றிய கே.எச்.குணம் கிளிநொச்சி மாவட்ட பிரதம கணக்காளராக இடமாற்றம் பெற்றுச் சென்றதை முன்னிட்டு நடத்தப்பட்ட பிரியாவிடை நிகழ்வில் பிரதேச செயலர் செ.ஸ்ரீ நிவாஸன் உரையாற்றுகிறார். அருகில் விழா நாயகருடன் உதவிப் பிரதேச செயலர் ய.பரந்தாமன், நிர்வாக அலுவலர் க.கார்த்திகேசு, நிதி உதவியாளர் த.சண்முகநாதன் ஆகியேரும் உள்ளனர்.

# ஹாட்லிக் கல்லூரியில் 64 மாணவர்கள் பல்கலைக்கு தெரிவு

யாழ்ப்பாணம் —

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த 65 மாணவர்களின் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்றனர். அவர்களின் விபரம் பின்வருமாறு -

**கணிதத்துறை**

பொறியியல்(MPR) - 08, பொறியியல்(EM)-01, கணிய அளவீடு-02, நில அளவையியல் - 01, பௌதிக விஞ் ஞானம் -11, பிரயோக விஞ்ஞானம் -05.

**உயிரியல்துறை**

மருத்துவம் - 02, மிருக வைத்தியம் - 01, உணவும் போசனையும் - 01, உயிரியல் விஞ்ஞானம் - 04.

**வர்த்தகத்துறை**

முகாமைத்துவம்-02, தோட்ட முகாமை - 01.

**கலைத்துறை**

கலையும் வடிவமைப்பும் - 18, கலை-05, சட்டம் -01, தொடர்பாடல் -01 என்ற வகையில் பல்கலைக் கழகத்துக்கு அனுமதிபெற்றுள்ளனர்.

# கடலுக்குள் தவறி வீழ்ந்த மீனவர் சடலமாக மீட்பு !

நெடுந்தீவு —

நெடுந்தீவில் இருந்து நேற்று முன்தினம் காலை கடற்தொழிலுக்குச் சென்ற வேளை கடலில் தவறி வீழ்ந்து காணாமல் போன குடும்பஸ்தர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் நெடுந்தீவு 11 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கறுப்பையா என்று அழைக்கப்படும் மூன்று பிள்ளைகளின் தந்தையான த.அமலேஸ்வரன் (வயது 27) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

இந்த நபரும் இன்னொருவரும் நெடுந்தீவிலிருந்து கடற்தொழிலுக்குச் சென்றவேளை வலிப்பு நோய் காரணமாக இவர் கடலுக்குள் தவறிவீழ்ந்தார்.

இதனையடுத்து அந்தப் பகுதி கடற்தொழிலாளர்கள் நீண்டநேரம் கடலில் தேடுதல் நடத்தியபோதும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பாக குடும்பஸ்தரின் உறவினர்களால் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இவரைத் தேடிச்சென்ற மீனவர்கள் நேற்றுக் காலை 6.30 மணியளவில் இவரது சடலத்தை கடற்பகுதியில் கண்டெடுத்தனர். (113)

# வடமராட்சியில் பதற்ற நிலை

வடமராட்சி —

வடமராட்சி நெல்லியடிப் பகுதியில் ஓட்டோக்களில் சென்ற 7 அப்பாவி இளைஞர்கள் கடந்த வியாழக்கிழமை இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து வடமராட்சிப் பகுதியெங்கும் பதற்ற நிலை நிலவி வருகிறது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து நேற்று முன்தினம் நெல்லியடி நகரப் பகுதியில் சகல வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன.

அதேவேளை உயிரிழந்த 7 பேரினது சடலங்களும் மந்திகை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் நேற்று முன்தினம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மதுபான நிலையத்தால் பயணிகள் பெரும் அவதி

யாழ்ப்பாணம் —

அச்சுவேலி நகரப் பகுதியிலுள்ள பஸ் நிலையமருகில் உள்நாட்டு வெளிநாட்டு மதுபான விற்பனை நிலையங்கள் அமைந்துள்ளதால் பஸ் நிலையத்துக்கு வரும் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அச்சுவேலி பஸ் நிலையத்துக்கு தெற்குப் பக்கமாக அமைந்துள்ள வியாபார நிலைய ஒழுங்கில் இந்த மதுபான விற்பனை நிலையம் அமைந்துள்ளதால் மதுபான நிலையத்துக்கு வருபவர்கள் பஸ் நிலையத்தில் நிற்பவர்களுடன் சேட்டையிடுவதும் கிண்டலடிப்பதுமாகத் தொல்லை கொடுத்த வண்ணம் உள்ளதாக பயணிகளும், மக்களும் விசனம் தெரிவித்தனர்.

இந்த மதுபான நிலையத்தில் மொத்தமாகவும், சில்லறையாகவும் மதுபானங்கள் விற்பனை செய்வதால் எந்த நேரமும் மதுபான பிரியர்கள் கூடிய வண்ணம் உள்ளனர்.

இதனால் பஸ் நிலையத்துக்கு வருவோர் மட்டுமல்லாமல் அயல் பகுதியில் உள்ளவர்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

# அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் —

வலிகாமம் வலயத்துக்குட்பட்ட யாழ். இணுவில் மத்திய கல்லூரியில் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது.

இலங்கை அதிபர் சேவை தரம் 1, தரம் 2.1 (பட்டதாரியாக இருக்க வேண்டும்) சேர்ந்தவர்களிடம் இருந்தும், இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு 1, வகுப்பு 2.1 (பட்டதாரியாக இருக்க வேண்டும்) வகுப்பு 2.11 (பயிற்றப்பட்ட பட்டதாரியாக இருக்க வேண்டும்) சேர்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடம் இருந்து பொருத்தமானவர்கள் விண்ணப்பிக்காதவிடத்து மாத்திரமே - ஆசிரிய சேவையிலுள்ள விண்ணப்பங்கள் கவனத்துக்கு கொள்ளப்படும்.

மாதிரி விண்ணப்பப் படிவத்தை வலயக்கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு, அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்கள் விண்ணப்பங்களை 15ஆம் திகதிக்கு முன் உரிய முறைப்படி வலயக்கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு வலிகாமம் வலய கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை மூன்று



பெயர் : இ.தேனுயா
முகவரி : தாளையடி.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் ----------
முகவரி ----------
பிறந்த ஆண்டு ----------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------
பெற்றோர் ஒப்பம்


# க.பொ.த சாதாரணதர பரீட்சை பாடசாலை பெறுபேறுகள் சில

யாழ்ப்பாணம் —

ஹாட்லிக் கல்லூரியில் க. பொ.த சா/தர பரீட்சையில் உயர் பெறுபேறுகள் பெற்றோர் எண்ணிக்கை வருமாறு -

10 ஏ - ஒருவரும், 9 ஏ-6 பேரும், 8 ஏ - 6 பேரும், 7ஏ-5 பேரும், 6ஏ - 8 பேரும், 5ஏ - 13 பேரும் பெற்றுள்ளனர்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் க.பொ.த சா/தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்றோர் விபரம் வருமாறு-

அ.ரேகா - 9ஏ- 1பி, க.கலைவாணன் - 7ஏ - 3 பி- 1சி, த.தாரணி - 6ஏ-3பி- 1சி, பொ.நாகவரதன் 6ஏ-2பி-1சி-1 எஸ், த.கேதீஸ்வரன் 6ஏ-3சி, ஜெ.கவிதரா - 5ஏ-4பி-1சி, சி.சுவர்ணதா- 5ஏ-2பி-3சி, க.கார்த்திகா - 4ஏ-3பி-3சி, வி.நந்தகுமார் - 4ஏ-3பி -3சி, க.நிரோஜன் - 4ஏ-3பி-2சி-எஸ், சி.நிஷாந் - 4ஏ-3பி-2சி, சி.பிரிந்திகா - 4ஏ- 3பி-2சி-எஸ், வீ.இமாஜினி - 4ஏ- 2பி- 4சி, சி.தனுஷன் - 4ஏ, 2பி, 1சி,2 எஸ், க.சோபிகா - 4ஏ, 4சி, 2எஸ், த. சிந்துஜா - 4ஏ- 3சி- 1எஸ் பெற்றுள்ளனர்.

# புதிய குருவின் முதல் திருப்பலி

யாழ்ப்பாணம் —

கிளரீசியன் மறைபோதக குருவாக திருநிலைபடுத்தப்பட்ட மரிய ஸ்ரீவன் சதீஸ் சவரிமுத்து (சி.எம்.எவ்) அடிகளாரின் முதற் திருப்பலி மாரீசன்கூடல் புனித கயித்தார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு தனது முதல் நன்றித் திருப்பலியை இவர் இன்று காலை 9 மணிக்கு ஒப்புக் கொடுக்கவுள்ளார்.

இந்தத் முதல் திருப்பலியில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# ஆயுதங்கள் பேசும் மொழிதான் புரியுமென்றால் அதன் மூலமே நாங்கள் இனிப் பேசுவோம்

## சமாதான செயலகத்தைச் சேர்ந்த இளந்திரையன்

கிளிநொச்சி

ஆயுதங்கள் பேசும் மொழிதான் அவர்களுக்குப் புரியுமென்றால், அதன் மூலமே இனிப் பேசி எமது தாயகத்தை மீட்போமென விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தைச் சேர்ந்த இளந்திரையன் தெரிவித்தார்.

அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்ற அரசியல் கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சர்வதேசம் எங்களிடம் கேட்டுக் கொண்டபடி அல்லது எங்களிடம் எதிர்பார்த்தபடி ஜனநாயக மார்க்கம் என்று கூறக்கூடியவகைகளிலெல்லாம் தனது உரிமைககளைக் கேட்டுப் பெறமுயன்று எங்களது மக்களுக்கு எதுவுமே கிடைக்கவில்லை. இப்போது எங்களது எதிரிகள் எங்களின் வாய்களை இறுகப் பொத்துகின்றனர். அதன் மூலம் எங்களது உரிமைக் கோரிக்கைகளை வெளிவராது தடுத்து விட அவர்கள் பகீரத முயற்சி எடுக்கின்றனர்.

தமிழ் ஊடகவியலாளர்கள் மீதும், ஊடகங்கள் மீதும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் தொடுக்கப்படுகின்ற கொலை வெறியாட்டம் எங்களுக்கு அதைத்தான் கூறுகின்றது. இதன் பின்னர் இருக்கின்ற சதித்திட்டத்தை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

முன்பொரு காலத்தில் எமது இனம் அமைதி வழியில் போராட்டம் நடத்தியது. ஆனால், அந்தப் போராட்டங்கள் எமக்கு எதையுமே பெற்றுத் தரவில்லை ஏனெனில், அந்தப் போராட்டங்கள் மூலம் எதிரிக்கு எம்மால் எதையும் செய்ய முடியவில்லை குறைந்தது சர்வதேசத்துக்காவது எமது பிரச்சினைகளை எடுத்துச் சொல்ல முடியவில்லை. எவ்வாறெல்லாம் நாம் ஒரு காலத்தில் போராடினோம் என்பதை இன்று நாங்கள் கூறித்தான் பலருக்கு உணர்த்த வேண்டியிருக்கிறது.

ஆனால் அந்த அகிம்சைப் போராட்டங்களின் இயலாமை எமக்கு ஒரு நன்மையைச் செய்தது. அதுதான் எமது கைகளுக்கு ஆயுதங்கள் ஏற வேண்டிய தேவையை உணர்த்தி நின்றது.

ஆயுதங்கள் ஒரு ஆற்றல் மிகுந்தவரின் கைகளில் கிடைத்தன. எமது இனத்தில் அதிக பற்றும், மனிதாபிமானப் பண்பும் நிறைந்த தலைவனிடத்தில் கிடைத்தன. அதனால் ஒரு தார்மீக யுத்தத்தில் நாங்கள் ஈடுபட்டோம். இதில் நாங்கள் அடைந்த குறிப்பான வெற்றி என்னவெனில், தமிழர்களும் மனிதர்கள். அவர்களும் மற்றவர்கள் போல் வாழத்தகுதி படைத்தவர்கள் என்ற நிலைக்கு எமது இனத்தை முன்னேற்றியதுதான்.

மீண்டும் பேச்சுவார்த்தைகள், அமைதி நடவடிக்கைகள் என்பவற்றை முன்னெடுக்கும் காலம் வந்தது. இது எமது விருப்பத்திலும், சர்வதேசத்தின் வேண்டுதலிலும் சிங்கள தேசத்துக்கு ஏற்பட்ட நிர்ப்பந்தங்களிலும் உருவாகியது.

நாலரை வருடங்களுக்கு மேல் பேசினோம். அம்பாறை மாவட்டத்தில் காஞ்சிரங்குடா என்ற இடத்தில் அமைதியான முறையில் போராட்டம் நடத்திய அப்பாவி மக்களைக் கொன்றதிலிருந்து பெரிய அளவிலான படுகொலைகளை சிங்களப் படை தொடக்கிவைத்தது. அது தமிழீழம் எங்கும் பரவியது. பின்னர் எமது இனத்தின் குரலாக நின்று ஒலிக்கக் கூடியவர்கள் மீது சிங்கள அரசின் கவனம் குறிப்பாகத் திரும்பியது.

உலக அரங்கில் எமது இனத்தின் பிரச்சினைகளை எடுத்துச் செல்லக் கூடியவர்கள் குறிவைக்கப்பட்டார்கள். எமது இனத்தின் கருத்தை வெளிப்படுத்தும் சுதந்திரம் சர்வதேசத்தின் முன்னால் - சிங்கள அரசால் எந்தத் தயக்கமுமின்றி குழிதோண்டிப் புதைக்கப்பட்டது. சர்வதேசத்தால் நன்கு அறியப்பட்ட எமது ஊடகவியலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட கொல்லப்பட்டனர்.

இவை மூலம் எதிரி எமக்கு விடுக்கின்ற செய்தி என்ன? அது ஒன்றும் மறைமுகமானதல்ல, அது மிகவும் வெளிப்படையானது சர்வதேசத்தின் விருப்பத்துக்குரிய எந்தவொரு ஜனநாயகச் செயற்பாட்டுக்கும் தமிழினத்தை அனுமதிக்க முடியாது என்பதே அது. சர்வதேசமும் இவற்றைப் பார்த்துக் கொண்டு வெறுமனே கைகட்டி, வாய் மூடிப் பார்த்திருப்பதன் மூலம் சிங்கள அரசின் இத்தகைய பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு மௌன அங்கீகாரம் வழங்குகிறார்கள்.

எனவே நாம் மீண்டும் துப்பாக்கிகள், பீரங்கிகள் என்பவற்றின் குறல்களின் வாயிலாகப் பேசவேண்டிய நிலையை அடைந்திருக்கிறோம். அவைகள் பேசும் மொழிதான் மற்றவர்களுக்கும் புரியுமென்றால் அவற்றின் மூலமே பேசுவோம் என மேலும் தெரிவித்தார். (09)

## எழுச்சி இசை நிகழ்வுகள்

கிளிநொச்சி

கலை பண்பாட்டுக் கழக மகளிர் பிரிவு போராளிகளின் இசைக் குழுவினரால் சமகால நிலவரத்தை எடுத்துக் கூறும் எழுச்சி இசை நிகழ்வுகள் கிளிநொச்சி பிரதேசத்தில் நடத்தப்பட்டு வருகிறது.

கிளிநொச்சியிலுள்ள ஒவ்வொரு கிராமம் தோறும் நடத்தப்பட்டுவரும் இந்த நிகழ்வுகளின் வரிசையில் கடந்த 4 ஆம் திகதி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் இசை நிகழ்வு நடைபெற்றது.

கலை பண்பாட்டுக் கழக மகளிர் போராளி வசந்தி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (09)



கொழும்பு - சமூக அபிவிருத்தி தேசிய நிறுவகத்தின் உளவளத் துணையாளர்கள் எண்பது பேர் அண்மையில் யாழ்ப்பாணம் வந்தனர். போரினால் பாதிக்கப்பட்டவர்களின் உள நலன்களை அறியும் நோக்கத்துடன் கொழும்பில் இருந்த வந்த இவர்கள் யாழ்ப்பாண சுகவாழ்வு நிலைய உளவளத் துணையாளர்களுடன் இருப்பதைப் படத்தில் காணலாம். (படம் - கனகரவி)

## நாச்சிக்குடா கடற்பரப்பில் மீனவர் மீது கடற்படை தாக்குதல்

வவுனியா

முழங்காவில் நாச்சிக்குடா கடற்பரப்பில் மீனவர் ஒருவர் கடற்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டு, கொலை அச்சுறுத்தலுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்றது.

பாசையூர் செபஸ்ரியான் வீதியைச் சேர்ந்த இயூயின் யூட்விறைன் என்ற மீனவர் அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் படையினராலும், துணை இராணுவக் குழுவினராலும் மேற்கொள்ளப்பட்டு வரும் கொலைக் கெடுபிடிகளை அடுத்து இடம் பெயர்ந்து நாச்சிக்குடாப் பகுதியில் வாழ்ந்து வருகின்றார்.

இந்த நபர் நேற்றுமுன்தினம் மீன் பிடிப்பதற்காக இரணைதீவு கடற்பரப்புக்குச் சென்றுவிட்டுத் திரும்பியவேளை கிராஞ்சிக்கும், நாச்சிக்குடாவுக்கும் இடைப்பட்ட கடற்பகுதியில் கடற்படையினர் அவரை இடைமறித்தனர்.

இதன் பின்னர் அவரை கடலில் குதித்து தமது படகுக்கு வருமாறு மிரட்டிய படையினர், அவரை தமது படகில் ஏற்றியுள்ளனர்.

பின்னர் அங்கு நின்றிருந்த கடற்படையினர் கால்களாலும், துப்பாக்கிகளாலும் தன்னை மிருகத் தனமாகத் தாக்கியதாக தெரிவித்த இந்த மீனவர் தன்னை விடுதலைப் புலி எனக் கூறுமாறும் இல்லையேல் கொலை செய்துவிடுவோம் என்று மிரட்டியதாகவும் குறிப்பிட்டார்.

மிக மோசமாகத்தாக்கப்பட்டு தன்னால் இயங்கமுடியாத நிலை ஏற்பட்ட பின்னர் தன்னை கடலில் தள்ளிவிட்டு கடற்படையினர் சென்றதாகவும் அவர் கூறினார்.

கடற்படையினர் நேற்று முன்தினம் கரைக்கு மிக அண்மையாக தமது கடற்படைப் படகுகளில் வந்ததாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## விழிப்புணர்வு கருத்தரங்கு

கிளிநொச்சி

தமிழீழ சுகாதார சேவையினரால் கடந்த 4 ஆம் திகதி செஞ்சோலை மாணவர்களுக்கும், பணியாளர்களுக்கும் சுகாதார விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தப்பட்டது.

இந்தக் கருத்தரங்கில் காச நோயின் கண்டுபிடிப்பு, அறிகுறிகள் தடுப்பு நடவடிக்கைகள், சிகிச்சை முறைகள் என்பனபற்றி தெளிவாக விளக்கமளிக்கப்பட்டது.

## மன்னாரில் விவசாயி படையினரால் கைது

மன்னார்

மன்னாரில் தமிழ் விவசாயி ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நானாட்டான் பிரதேசம் வெள்ளையக்காட்டைச் சேர்ந்த விசாந்தி அலோசியஸ் என்ற தமிழ் விவசாயியே கடந்த ஏப்ரல் 29 ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்டவராவார்.

சூரிய கட்டைக் காட்டுப் பகுதிக்கு காய்கறிகளை விற்பனை செய்வதற்காக சென்ற போது அவர் படையினரால் பொது மக்கள் முன்னிலையில் கைது செய்யப்பட்டார்.

ஆனால் தற்போது அலோசியசை இராணுவத்தினர் கைது செய்யவில்லை என மறுத்துள்ளனர் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ். விநோனோதலிங்கம் ஆகியோர் மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

மேலும் கடந்த ஏப்ரல் 29 ஆம் திகதி இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் அலோசியசின் உறவினரான லோகேஸ்வரன் ரமணி இது தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளதாக எகுறிப்பிட்டுள்ளார்.

## டிஜிற்றல் இயந்திரம் அன்பளிப்பு

கிளிநொச்சி

கிளிநொச்சி பொன்னம்பலம் வைத்தியசாலைக்கு நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம் குழந்தைகளை நிறைபார்க்கும் நவீனரக டிஜிற்றல் இயந்திரம் ஒன்றை வழங்கியுள்ளது.

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் சே. பிரதாப் இதனை வழங்கினார். (இ)

## மருத்துவ சேவை!

கிளிநொச்சி

தமிழீழ சுகாதார சேவைகளின் நடமாடும் மருத்துவ சேவையினரால் சித்திரை மாதம் வன்னிப் பிராந்தியத்தின் பின்தங்கிய இருபத்தைந்து கிராமங்களில் நடமாடும் மருத்துவ சேவை செய்யப்பட்டுள்ளதுடன், சுமார் மூவாயிரத்து ஐநூறு நோயாளிகள் சிகிச்சையளிக்கப்பட்டனர்.

இவர்களில் சுமார் ஆயிரம் பேர் வைரஸ் காய்ச்சலுக்காக சிகிச்சை பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

## புனர்வாழ்வுப் பணியாளரை விடுவிக்கக் கோரி பேரணி

கிளிநொச்சி

கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்களை விடுக்கக்கோரி வட்டக்கச்சியில் நேற்றையதினம் ஆர்ப்பாட்ட பேரணி இடம் பெற்றது.

நேற்றுக்காலை கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன முன்றலில் ஆரம்பமான இந்த பேரணி வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தை வந்தடைந்தது. இந்தக் கண்டன பேரணியில் மாணவர்கள், ஆசிரியர்கள் முன்பள்ளி ஆசிரியர்கள், புனர்வாழ்வு நிறுவன பணியாளர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

கண்டனப் பேரணியின் நிறைவில் கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் சி. சிறிரஞ்சினி தலைமையில் கண்டனக்கூட்டம் ஆரம்பமானது இதில் அரச சார்பற்ற இணையத்தலைவர் எஸ். கணேசபிள்ளை வர்த்தக சங்கச் செயலாளர் க. அப்பன் ஆகியோர் உரையாற்றினர்.

மகஜரை புனர்வாழ்வு நிறுவன பணியாளர் நா. யோகராணி வாசித்தார். தொடர்ந்து இந்த மகஜர் கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலரிடமும் மாவட்ட போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவிடமும் கையளிக்கப்பட்டது.

## செந்நெல் வெளியீடு

மன்னார்

மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயத்தில் உயர் தர மாணவர் ஒன்றியத்தின் ஒன்று கூடலும் செந்நெல் மலர் வெளியீடும் நேற்று முன்தினம் நடைபெற்றன.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். விநோநோகராதலிங்கம் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கடந்த காலங்களில் ஆண்டு தோறும் வெளியிடப்பட்ட மாணவர்களின் படைப்பான செந்நெல் அண்மைக்காலமாக வெளிவராது இருந்தது. இந்த ஆண்டு உயர்தர மாணவர்களின் படைப்புகளைத் தாங்கி செந்நெல் மீண்டும் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



புளியம் - பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் இடம் பெற்ற பொங்கல் விழாவின் போது பக்தர்கள் காவடி எடுப்பதைப் படத்தில் காணலாம். (படம் வே. சீலன்)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
தேறினும் தேறாவிடினும் அழிவின்கண்
தேறான் பகாஅன் விடல்
- திருக்குறள்

## நமது நோக்கு

# சாதகமற்ற நிலைப்பாடு!

இலங்கை விவகாரத்தில் இந்தியா தனது தலையிடாக் கொள்கையை மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறது. தமிழ் மக்களுக்கு எதிரான தமது நடவடிக்கையில் இந்தியாவையும் இணைத்துக்கொள்வது என்ற இலங்கை அரசின் திட்டம் மீண்டும் தோல்வி கண்டிருப்பதாகவே ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

அதுமட்டுமன்றி இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவைத் தலையிடச் செய்வது மற்றும் இந்தியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாட்டைக் கைச்சாத்திடுவது தான் இலங்கை அரசின் திட்டமாகும்.

இத்தகைய நோக்கங்களுக்காகவே இன்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர புதுடெல்கி செல்லவுள்ளார். இவர் பாதுகாப்பு உடன்பாட்டைச் செய்து கொள்வதற்கு இந்தியத் தலைவர்களிடம் வலியுறுத்துவார் என்றும், அரசியல் ரீதியான ஆதரவை இந்தியாவிடம் கோருவார் என்றும் புதுடெல்கித் தகவல்கள் தெரிவித்துள்ளன.

ஆனால், இந்தியா தனது நிலைப்பாட்டில் மிகத் தெளிவாகவே இருப்பதாகக் கூறப்படுகிறது. இலங்கை அரசைப் பொறுத்தவரையில் இந்தியாவின் நிலைப்பாடு அதற்கு அச்சமாக இருக்கிறது.

இலங்கை அரசு முன்னர் தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட தாக்குதல்கள் குறித்து இந்தியா அக்கறை காட்டாமல் இருந்தது. ஆனால், இப்போது நிலைமை அப்படியில்லை. அண்மையில் திருகோணமலை - மூதூரில் விமானத் தாக்குதலை இலங்கை அரசு தமிழர் பகுதியில் நடத்திய போது - இந்தியா அதை நிறுத்துமாறு வற்புறுத்தியது.

இதன் காரணமாக இலங்கை அரசு நெருக்கடிக்குள்ளாகியது. தமிழ் மக்கள் மீது தொடுக்கப்படும் தாக்குதல்கள் குறித்து இந்தியா பகிரங்கமாக எதிர்ப்புத் தெரிவித்தால் - சர்வதேச அரங்கில் தமக்கு எதிரான நிலைப்பாடு தோன்றிவிடுமோ என்ற அச்சம் இலங்கைக்கு இருக்கலாம்.

இதற்காகவே இந்தியாவிடம் அரசியல் ரீதியான ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன், பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு விடயத்திலும் பேச்சுக்கள் நடத்துவதற்கே மங்கள சமரவீர புதுடெல்லி செல்லவுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆறு மாதங்களுக்குள் மூன்றாவது தடவையாக இவர் புதுடெல்லி செல்கிறார் என்றால் - இந்தியாவின் நிலைப்பாடு இலங்கைக்கு சாதகமாக இல்லை என்றுதான் பொருள்.

தமிழர் மீதான தாக்குதல்கள் எதிர்காலத்தில் தீவிரப்படுத்தப்படும் நிலையில் இந்தியாவிடம் இருந்து எதிர்ப்புப் கிளம்பாமல் பார்த்துக்கொள்வதே மங்களவின் பொறுப்பாக இருக்கிறது.

ஆனால், மங்கள சமரவீர அடிக்கடி வந்து போனாலும்- இந்தியா தனது நிலைப்பாட்டிலிருந்து விலகிக் கொள்ளப் போவதாகத் தெரியவில்லை.

அது மட்டுமன்றி பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு கைச்சாத்திடும் விடயத்திலும் இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டவில்லை என்றே தோன்றுகிறது.

கடந்த பல வருடங்களாகவே இந்தியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாட்டை பெற்றுகொண்டு அதன் சிறகுக்குள் அடைக்கலம் தேடிக்கொள்ள இலங்கை அரசு முற்பட்டது.

ஆனால், இந்தியா தனது உள்நாட்டு அரசியல் நிலைப்பாடுகளின் காரணமாக இந்த உடன்பாடு செய்துகொள்வதிலிருந்து கழன்று கொண்டது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலங்கை அரசு ஒரு கல்லில் இரண்டு மாங்காயை வீழ்த்த நினைக்கிறது.

இந்தியாவின் பகை நாடுகளான சீனா, பாகிஸ்தானுடன் பாதுகாப்பு உறவுகளை ஏற்படுத்திக் கொண்டு - ஆயுதங்களை வாங்குவதற்கு மகிந்த அரசு நடவடிக்கை எடுத்தது.


இதன் மூலம் ஆயுதங்களை வாங்குவதுடன் இந்தியாவை வழிக்குக் கொண்டு வரவும் முடியும் என்று இலங்கை கருதுகிறது.

ஆனால், இந்தியா அதற்கு இப்போது ஆப்பு வைத்து விட்டது. எந்த நாட்டிடமாவது இலங்கை ஆயுதங்களை வாங்கட்டும், ஆனால் இலங்கைக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

இன்றைய நிலையில் இந்தியாவின் நிலைப்பாடானது - இலங்கை அரசுக்கு நெருக்கடிகளைக் கொடுப்பதாகவே மாறி வருகிறது. மங்களவின் புதுடெல்கி விஜயத்தின்போது இதைத் தெளிவாக உணர முடியும் என்றே கருதப்படுகிறது.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# தமிழ் தேசிய இளம் தலைமுறையை கொன்றொழிப்பதை ஏற்க முடியாது

## நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன்



கரவெட்டி

தமிழ்த் தேசிய இனத்தின் இளைய தலைமுறை அரச பயங்கரவாதம் மூலம் கொன்றொழிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாத நிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். எனவே, அரச பயங்கரவாத செயற்பாடுகளுக்கு எதிராக அணி திரண்டு தமிழினத்தின் இளைய தலைமுறையைக் காப்பாற்றும் வரலாற்றுக் கடமையை உணர்ந்து அனைவரும் செயற்படவேண்டுமென நெல்லியடியில் படையினரின் தாக்குதலால் 7 தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டதைக் கண்டித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன் வெளியிட்ட கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கடந்த ஆறுமாத காலமாக இலங்கையில் குறிப்பாக வட-கிழக்கு மாகாணங்களில் அரச படைகளின் ஆக்கிரமிப்புக்கு உள்ளான பிரதேசங்களில் கொடூரமான தமிழ் மக்கள் மீதான அரச பயங்கரவாத நிழல் யுத்தம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இந்த நிழல் யுத்தத்தால் அரச கட்டுப்பாட்டில் நாளாந்தம் தமிழ் பேசும் மக்கள் கொலை செய்யப்படுவதும் கடத்தப்படுவதும் துன்புறுத்தப்படுவதும் அவர்களின் சொத்துக்கள் கொள்ளையடிக்கப்படுவதும் எரியூட்டப்படுவதும் சாதாரணமாக நாளாந்தம் நடைபெறுகிறது. இதனால் அரசபடைகளின் ஆக்கிரமிப்பு பிரதேசங்களில் வாழும் தமிழ் பேசும் மக்கள் மிகுந்த அச்சத்தோடும் துயரத்தோடும் யாருக்கு என்ன நடக்கப் போகிறது? எனும் ஏக்கத்தோடு வாழும் அவல வாழ்வே தொடர்கிறது. இந்த வாழ்வை தொடர்ந்தும் அனுபவிக்க தமிழ் பேசும் மக்கள் தயாராக இருக்க மாட்டார்கள் என்பதை விரைவில் ஆக்கிரமிப்பாளர்கள் அறியும் காலம் வந்து சேரும்.

அண்மைக்காலமாக அரச பயங்கரவாத நிழல் யுத்தத்தின் மூலம் இளம் சந்ததியினர் படுகொலை செய்யப்படுவது திட்டமிட்டு அரச படைகளாலும் ஒட்டுப் படைக் குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்டு வருவது - அவர்களின் தாக்குதல் பரிணாம வளர்ச்சியாக காணப்படுகிறது. குறிப்பாக இளம் வர்த்தகர்கள், ஓட்டோ சாரதிகள், தொழில்சார் மக்கள், கல்விச் சமூகத்தினர், ஊடகவியலாளர்கள் என கொலைகள் தொடர்ந்து செல்வதை தமிழ் பேசும் மக்கள் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் காலம் முடிவடையும்.

புத்தூரில் நான்கு இளைஞர்கள் ஓட்டோவில் சென்றபோது அவர்களுடன் துவிச்சக்கரவண்டியில் வந்தவரையும் இணைத்து ஐவரை கொலை செய்த படையினர் பின்னர் இராச கிராமத்தின் ஓட்டோ சாரதிகள் சங்கத் தலைவரான கண்ணன், கரன் ஆகியோரின் கொலை - நெல்லியடி சந்தியில் ஆட்டோ தரிப்பிடத்தில் நடந்தது. இந்த இருவரின் இறுதிக் கிரியையில் துணிச்சலோடு நின்று உழைத்தவர்கள்தான் நெல்லியடியில் அரசபடைகளால் கொலை செய்யப்பட்டவர்கள்.

தற்போது அரச படைகளும் ஒட்டுக் குழுக்களும் செய்யும் கொலைகளை நியாயப்படுத்த கொலை செய்யப்பட்டவர்கள் குண்டெறிந்தார்கள். குண்டோடு வந்தார்கள். ஆயுதம் வைத்திருந்தார்கள் என தமது ஆயுதங்களையும் குண்டுகளையும் கொலை செய்தவர்களின் அருகே வைத்தும் வெடிக்கச் செய்தும் நியாயப்படுத்த முனைவதை சில நாட்களாக மக்கள் அவதானித்துள்ளனர். இதை இலங்கை அரசும், அரபடைகளும், ஒட்டுக்குழுக்களும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தாதிருக்க சர்வதேச சமூகம் முறையான கண்காணிப்புச் செய்யவேண்டும்.

எனவே, நாளாந்த கூலிப்பிழைப்பை மேற்கொள்ளும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த இளம் உழைப்பாளர்களின் இழப்பு என்பது அவர்கள் சார்ந்த குடும்பங்களுக்கு பேரிழப்பாவதுடன் தமிழ்த் தேசிய இனத்தின் இளைய தலைமுறை அரச பயங்கரவாதம் மூலம் கொன்றொழிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாத நிலைக்குத் தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, இத்தகைய பொறுப்பற்ற செயலைத் தடுத்து நிறுத்த தமிழ் பேசும் மக்கள் தம்மை தயார்படுத்தி உண்மை நிலையை உலகுக்கு எடுத்துச் சொல்லும் துணிச்சலுடன் உழைக்க முன்வரவேண்டும்.

அரச சார்பான பொய்ப்பிரச்சாரத்தை மேற்கொண்டு அரச பயங்கரவாதத்தை நியாயப்படுத்தும் சிங்கள ஊடகங்களின் பொய் முகத்திரையை கிழித்தெறிந்து உண்மைகளை உலகுக்கு உணர வைப்பதுடன் அரச பயங்கரவாத செயற்பாடுகளுக்கு எதிராக நாம் அணிதிரண்டு - தமிழினத்தின் இளைய தலைமுறையினரை காப்பாற்றும் வரலாற்றுக் கடமையை உணர்ந்து செயல்படவேண்டும். இறந்தவர்களின் ஆத்ம சாந்திக்காக அவர்களின் உறவுகளுடன் கிராமத்துவரதும் துயரத்தில் பங்கேற்றுக்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கமக்காரர் அமைப்பை இயங்கவைக்க கோரிக்கை

கரவெட்டி

கரவெட்டி தெற்கு கமக்காரர் அமைப்பு தொடர்ந்தும் இயங்காத நிலையில் உள்ளதனால், அந்தப் பகுதி விவசாயிகள் மிகுந்த கஷ்டங்களை எதிர் நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கமக்காரர் அமைப்பு இயங்காததால், அரசினால் வழங்கப்படும் உர மானியம் மற்றும் விதை தானியங்கள் கடனடிப்படையிலான விதை தானியங்களைக் கூட விவசாயிகள் பெற முடியாத நிலையில் உள்ளனர்.

இந்த அமைப்பை மீண்டும் இயங்க வைக்குமாறு, கடந்த வருடம் டிசம்பர் மாதம் 18ஆம் திகதி புலோலி கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தருக்கு மகஜரொன்று கையளிக்கப்பட்ட போதிலும், இதுவரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, கமக்காரர் அமைப்பை தொடர்ந்தும் இயங்க வைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு அந்தப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பொதுச்சபை கூட்டம்

யாழ்ப்பாணம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை பொதுச் சபைக்கூட்டம் ஜூன் மாதம் 18ஆம் திகதி பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தப் பொதுக்கூட்டம் கென்றிடொனால்ட் மண்டபத்தில் காலை 10மணிக்கு நடைபெறவுள்ளதால் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கடல் விமான விவகாரத்தில் ஜே.வி.பிக்குள் முரண்பாடு!

கொழும்பு—

விடுதலைப் புலிகளின் தளபதிகளின் பயணத்துக்கு கடல் விமானத்தை வழங்குவது தொடர்பான விடயத்தில் ஜே.வி.பியினுள் முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளுக்கு கடல் விமானம் வழங்கினால் சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரான அனுரகுமார திஸநாயக்க கட்சி உறுப்பினர்களிடையே கருத்துக்களைக் கூறிவந்திருக்கிறார்.

ஆனால், அவரது கருத்தை முறியடிக்கும் வகையில் அந்தக் கட்சியின் பிரசாரச் செயலாளர் அவருக்கெதிராகச் செயற்பட்டுவருகிறார்.

விடுதலைப் புலிகளின் தளபதிகளைப் பாதுகாப்பாக கிழக்கிலிருந்து - வடக்கிற்கு அழைத்து வருவதற்கு அரசாங்கம் கடல் விமானத்தை வழங்கவுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவித்ததையடுத்து அனுரகுமார திஸநாயக்க அடுத்த சில நாட்களில் நடைபெறவிருந்த சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணித்து கடல் விமான நடவடிக்கைகளைக் கைவிடுவதற்கு மகிந்தவுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று தனது கட்சிக்கு யோசனை தெரிவித்திருந்தார்.

ஜே.வி.பியும் அந்த யோசனையை ஏற்றது. எனினும், அதனை அறிந்த மகிந்தவும் அவரின் ஆலோசகர்களும் விமல் வீரவன்சவை அழைத்து இந்த நிலைமையை மாற்றுமாறு கோரியுள்ளனர்.

இந்த நிலைமை பற்றிப் பேசுவதற்கு தனியாக நேரம் ஒதுக்கித் தருவதாகவும் மகிந்தவால் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து கட்சியின் பொதுச் செயலாளருடன் தொடர்பு கொண்ட விமல் வீரவன்ச சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணிக்கும் தீர்மானத்தை மாற்றிக்கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

பின்னர் ரில்வின் சில்வாவின் வேண்டுகோளுக்கும், அழுத்தங்களுக்கும் அமைய அனுரகுமார திஸநாயக்க தனது யோசனையை விலக்கிக் கொண்டார்.

ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கத்துக்கு கடல் விமானம் வழங்கியபோது நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்திய ஜே.வி.பிக்கு, அதே தவறை மகிந்த செய்யும்போது அவரைத் தமது கட்சியால் தடுக்க முடியாதுள்ளது என்றும் அனுரகுமார திசாநாயக்க கூறியுள்ளதாகத் தெரிகிறது.

ஜே.வி.பிக்குள் உருவாகியுள்ள வலிமையான மகிந்த ஆதரவு அணியால் அந்தக் கட்சி விரைவில் பிளவைச் சந்திக்கக்கூடும் என்றும் கருதப்படுகிறது.

## அச்சத்தால் இடம்பெயரும் சிங்கள குடியேற்றவாசிகள்

கொழும்பு—

வெலிஓயா மற்றும் கெபிற்றிகொல்லாவ பகுதிகளில் உள்ள சிங்களக் குடியேற்றவாசிகள் தாக்குதல் அச்சம் காரணமாக தமது வீடுகளை விட்டு வெளியேறிவருவதாக செய்திகள் தெரிவித்தன.

அச்சுறுத்தல் காரணமாக கெபிற்றிக்கொல்லாவ பிரதேச செயலக பிரிவிலிருந்து 400 சிங்களக் குடும்பங்கள் இடம்பெயர்ந்து சென்றுள்ளன.

கடந்த 4 ஆம் திகதி - கெபிற்றிகொல்லாவவுக்கு அருகிலுள்ள ஹல்மில்லாவ காட்டுப் பகுதிக்குள் இனந்தெரியாத ஆயுதபாணிகள் நடமாடியிருந்தனர்.

இவர்கள் கிராமவாசிகள்மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

இதையடுத்து 300 பேர் ஹல்மில்லாவ பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர். மேலும் 20 குடும்பங்கள் கியுல்கல சந்தியிலுள்ள பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளன.

அதேவேளை - வெலிஓயா பகுதியில் குடியேறியிருந்த சுமார் 200 இற்கும் மேற்பட்ட சிங்களக் குடியேற்றவாசிகள் கொக்கிளாய் இராணுவ முகாம் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல்களை அடுத்து நீர்கொழும்புக்கு இடம்பெயர்ந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

## கொழும்பில் ஓட்டோக்களுக்கு ஒட்டப்படும் புதிய ஸ்ரிக்கர்கள்

கொழும்பு—

கொழும்பில் பாதுகாப்பை அதிகரிக்கும் நோக்குடன் ஓட்டோக்களுக்கு விசேட ஸ்ரிக்கர்கள் வழங்கும் செயற்திட்டத்தை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பு நகரின் பாதுகாப்பு மற்றும் அதிகரித்து வரும் வன்முறைகளை கட்டுப்படுத்தும் செயற்திட்டத்தின்கீழ் கொழும்பில் அனைத்து பிரதேசங்களிலும் இந்தச் செற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத்திட்டத்தின் கீழ் அனைத்து ஓட்டோக்களும் பொலிஸ் நிலையத்தில் பதிவுசெய்யப்பட்டு அவற்றுக்குரிய குறியீடுகள், மற்றும் இலக்கங்கள் அடங்கிய ஸ்ரிக்கர்கள் வழங்கப்படவுள்ளது.

இந்தப் புதிய இலக்கங்கள் வழங்கப்படுவதன் மூலம் பொலிஸ் மற்றும் ஓட்டோச்சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் இந்தப் பதிவு இலகுவாக இருக்கும் எனவும் -

போலி ஸ்ரிக்கர்களை பயன்படுத்தும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் கொழும்பு பிராந்தியத்துக்கு பொறுப்பான பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்தார்.

## வெசாக்கை முன்னிட்டு கொழும்பின் பாதுகாப்பு தீவிரம்

கொழும்பு—

பௌத்தர்களின் சமயப் பண்டிகையான வெசாக்கை முன்னிட்டு கொழும்பு நகரில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெசாக் அலங்காரங்களைப் பார்ப்பதற்காக கொழும்புக்குவரும் பொதுமக்களின் பாதுகாப்புக்காக பொலிஸார் மற்றும் முப்படையினரையும் ஈடுபடுத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

விடுதலைப் புலிகளின் இலக்காகக் கருதப்படும் இடங்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் தற்போது பலப்படுத்தப்பட்டு தேடுதல் நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக நடைபெற்றுவருவதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னர் கொழும்பின் பாதுகாப்பு தொடர்பாக நெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த அந்த அதிகாரி - பாதுகாப்புத் தரப்பினரின் சிறு கவனயீனங்கள் பற்றியும் கூடுதல் கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## முஸ்லிம் குடும்பஸ்தர் சுட்டுக் கொலை!

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு - ஏறாவூரில் முஸ்லிம் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். ஏறாவூரைச் சேர்ந்த முஸ்தப்பா லெயின் காதர் (வயது 40) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

நேற்றுமுன்தினம் வாழைச் சேனையிலுள்ள வங்கி ஒன்றிலிருந்து ஏழு இலட்சம் ரூபா பணத்துடன் ஏறாவூரிலிருந்த தனது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை இவரைப் பின்தொடர்ந்து வந்த இனந்தெரியாத நபர்கள் இவரைச் சுட்டுவிட்டு இவரிடமிருந்த ஏழு இலட்சம் ரூபா பணத்தையும் அபகரித்துச் சென்றுள்ளனர். இவரது சடலம் ஏறாவூர் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு விசாரணைகளின் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## இராணுவ வைத்தியசாலையில்...

லைக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த இராணுவத் தளபதி வேகமாக குணமடைந்து வருகிறார். தற்போது முழுமையான சுய நினைவைப் பெற்றிருக்கும் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவின் அடிவயிற்றில் ஏற்பட்ட பாரிய காயம் மட்டுமே குணமடையாதுள்ளது.

குறுகியகால ஓய்வின் பின்னர் அவர் வழமைநிலைமைக்கு திரும்ப முடியும் என மருத்துவர்கள் தெரிவித்தனர். அத்துடன், அவர் விரைவில் தமது கடமையை பொறுப்பேற்றுக் கொள்வார் என்றும் அந்த அறிக்கையில தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத்பொன்சேகா தற்போது உணவு உட்கொள்ள ஆரம்பித்திருப்பதாக இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை நூறுவீதம் வெற்றியளிப்பதாகவும், அவர் தனது குடும்பத்தினருடன் நன்றாக உரையாடுவதாகவும் - ஆனால் தொடர்ந்து அவசரசிகிச்சைப் பிரிவிலேயே சிகிச்சை பெறுவார் எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இராணுவச் சிப்பாய் படுகாயம்

வடமராட்சி—

மாலுசந்தி-உடுப்பிட்டி வீதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது மறைந்திருந்து நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

நேற்று பிற்பகல் 12.45 மணியளவில் இந்தச்சம்பவம் இடம்பெற்றது.

இதன்போது காயமடைந்த சிப்பாய் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## ஓட்டுமடம் தாக்குதலில் சிப்பாய் காயம்

யாழ்ப்பாணம்—

யாழ்.நகரில் ஓட்டுமடம் சந்திப் பகுதியில் இராணுவத்தினர் மீது நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

இந்தச்சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார். இவர் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்டார்.

## இளைஞர் சுட்டுக்கொலை

திருகோணமலை—

திருகோணமலை - கந்தளாய் பகுதியில் நேற்று முன்தினம் மாலை தமிழ் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் மாலை 4.10 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இவர்கள் எஸ்.பிரதீபன் என்ற இளைஞரைச் சுட்டுக்கொன்றுவிட்டுத் தப்பிச்சென்றதாகக் கூறப்படுகிறது.

## சிப்பாய் தற்கொலை

யாழ்ப்பாணம்—

நாகர்கோவில் இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவச்சிப்பாய் ஒருவர் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. எனினும், மேற்படி சிப்பாய் எவ்வாறு தற்கொலை செய்துகொண்டர் என்பது குறித்து தெரியவரவில்லை

## வீரச்சாவு

மட்டக்களப்பு—

கடந்த 03-04-2006 அன்று கருணா குழு முகாம் தகர்ப்பின் போது சயனைட் அருந்தி போராளி ஒருவர் வீரச்சாவடைந்ததாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

லெப்.இளஞ்சோழன் (பொன்னுச்சாமி நரேஷ்குமார்) 2 ஆம் யுனிற் பாவற்குளம் வவுனியா என்ற போராளியே வீரச்சாவடைந்தவராவார்.

## நகரில்...

வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டதாகத் தெரிய வருகிறது.

அதேவேளை - இந்தச் சம்பத்தை அடுத்து கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதியால் சென்ற பலர் படையினரின் கடுமையான தாக்குதலுக்கு இலக்காகினர்.

அத்துடன், படையினர் இந்தப் பகுதியில் தேடுதல் சோதனை நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## படுகொலைகள்...

பட்டால் நோர்வே அனுசரணையாளர் ஊடாகத் தெரிவிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்...

செய்வதில் தொடங்கி இன்று நேரடியாகவே இராணுவம் அப்பாவி தமிழர்களை வகை தொகையின்றி, கேட்டுக்கேள்வி எதுவுமின்றி படுகொலை செய்யத் தொடங்கிவிட்டது.

அந்தப் படுகொலைகளை, பழிகளை புலிகளின் பேரில் சுமத்தி ஏதுமறியாத அப்பாவி மாணவர்களையும், இளைஞர்களையும் கைது செய்து அடைப்பதன் மூலம், தங்களால் ஏவி விடப்பட்ட உண்மையான கொலையாளிகளைப் பாதுகாக்க சிங்கள இராணுவமும், பொலிஸாரும் முயற்சி எடுத்து வருகின்றன.

முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோல நவீன கோயபல்ஸ் ஆன இராணுவ பேச்சாளர் பிரசாத் சமரசிங்கவுடன் - ஜனாதிபதி, அமைச்சர்கள், சமாதானச் செயலக பணியாளர்களென எல்லோரும் உண்மையை மறைப்பதுடன், அரச ஊடகங்களின் மூலம் பொய்ப் பிரசாரங்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. அதேவேளை, உண்மை நிலையை வெளிப்படுத்தும் நடுநிலை ஊடகங்களின் குரல்வளை நெரிக்கப்படுகிறது. இவை எல்லாவற்றையும் தடுத்து நிறுத்தமுடியாத கையறு நிலைக்கு கண்காணிப்புக் குழுவும் வந்துவிட்டது.

யாழ்.குடாநாட்டில் நாளாந்தம் பல அப்பாவித் தமிழரின் உயிர்கள் அநியாயமாக பறிக்கப்படுகின்றன. அப்பாவி மாணவர்களும், பயங்கரவாதிகளாக்கப்படுகின்றனர்.

அண்மையில் உதயன் பணிமனையுள் புகுந்து படுமோசமான கொலைகளைப் புரிந்துவிட்டு - அதனை அப்பாவி மாணவர்களின் தலையில் கட்டிவிட்டு, தங்களால் ஏவப்பட்ட உண்மையான கொலையாளிகளைப் பாதுகாக்கும் முயற்சியில் சிங்கள இராணுவமும், காவல் துறையும் ஈடுபடுகின்றன.

புத்தூர்ப் படுகொலைகளின் குருதி காயுமுன் நெல்லியடியில் ஒரே கிராமத்தைச் சேர்ந்த ஏழு அப்பாவி இளைஞர்களின் உயிர்கள் இராணுவத்தால் பறிக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் பயங்கரவாதிகளாக்கப்பட்டுள்ளனர். -

அத்துடன், அந்த அப்பாவி மக்களின் உயிர்களைப் பறிப்பதற்கு ஆர்.பி.ஜி கனரக ஆயுதம் பயன்படுத்தப்பட்டுள்ள செயலானது இராணுவத்தின் இன அழிப்பின் தீவிர தன்மையைக் காட்டி நிற்கிறது.

நாம் பணிக்குச் சென்றுவரும் போதோ, எம்பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்றுவரும்போதோ அல்லது எமது பணியிடங்களிலோ எங்கேனும், எந்த நேரத்திலும் படுகொலை செய்யப்பட்டதுடன் பயங்கரவாதிகளின் பட்டியலிலும் சேர்க்கப்படலாம். கைதுசெய்யப்பட்டு முண்டங்களாக எறியப்படலாம்.

இன்று குடாநாட்டில் எந்தவொரு உயிருக்கும் உத்தரவாதமில்லை. இந்தப் படுகொலைகளை நிறுத்தவும் சிங்கள அரசின் இனவெறியாட்டத்தை சர்வதேச சமூகத்துக்கு உணர்த்துவதற்கும் ஒட்டுமொத்தப் பணிப்புறக்கணிப்புக்கு அனைவரும் ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரு இளைஞர்களை காணவில்லை

வடமராட்சி—

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற இரு இளைஞர்கள் காணாமல் போயிருப்பதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கற்கோவளத்தைச் சேர்ந்த சசிக்குமார் (வயது 23), அதே இடத்தைச் சேர்ந்த இவரது நண்பரான கிருஸ்ணகுமார் (வயது 23) ஆகிய இருவருமே காணாமல் போயிருப்பதாகத் தெரியவருகிறது.

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி வேலாயுதம்

வானர்குடியிருப்பு, தம்பசிட்டி, புலோலி மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி பரமேஸ்வரி வேலாயுதம் அவர்கள் 06.05.2006 (நேற்று) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஆறுமுகம் - வேலாயுதம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - இராசமணி தம்பதிகளின் மூத்த மகளும், பார்த்தீபன் (ஆசிரியர், பெரியபண்டிவிரிச்சான் மகா வித்தியாலயம், மன்னார்), சிறிபதி, வானதி (தேசிய கல்வியியற் கல்லூரி, மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், வே.சிறீஸ்கந்தராசா (ஓய்வுபெற்ற பிராந்திய நிர்வாக அதிகாரி, தபால் திணைக்களம், சிலாபம்), ஸ்ரீநாதன் (ஆசிரியர், தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை), தெய்வசிகாமணி, நந்தனசிகாமணி (ஆசிரியர், அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயம்), மதிவதனி (வடபிராந்திய கணக்காளர் திணைக்களம், தபாலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னை இல்லம்,
வானர்குடியிருப்பு,
பருத்தித்துறை.

தகவல்:-
கணவர் ஆ.வேலாயுதம் (அண்ணாச்சி),
பிள்ளைகள்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.05.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.